

# திருக்கோயில்



மார்ச் 2002

விலை
ரூபாய் ஐந்து



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் சீராய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் இணை ஆணையாளர் (தலைமை இடம்) திருமிகு ப. தனபால், எம்.ஏ., பி.எல். அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் இணைஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு பா. பாஸ்கரன், பி.எஸ்.சி., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - மாசி / | மணி |
|---|---|---|---|
| 44 | | மார்ச்சு, 2002 | 3 |



## சிறப்பாசிரியர்

திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

## ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

திருவாவினன்குடி அருள்மிகு
குழந்தை வேலாயுதசுவாமி

## பொருளடக்கம்


சிவராத்திரி மகிமை - அ. நிறைமதி, பிஎல்.

கற்கண்டுக் கந்தபுராணம் - முனைவர் த. அமிர்தலிங்கம்

பவானி அருள்மிகு சங்கமேசுவரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்கள் வரலாறு
- (திருக்கோயில் வெளியீடு)

காரைக்கால் அம்மையார் சிறப்புகள்
- டி.எஸ். பாலு, எம்.ஏ. பிஎட்.,

திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை வரலாறு
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள் - ''திருப்புகழ்த் தேனீ''

அம்பிகையின் திருவருள் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

இல்லாமல் இருப்பதே இறைமை
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

சிவனடியார்களும், பன்னிரு திருமுறையும்
- மயிலை சிவஞானஜோதி
சிவசக்தி அம்மையார்

கருவைக் காத்த கருணைக்கடல்
- புலவர் ஏ. பரந்தாமன் எம்.ஏ. பிஎட்.,



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# சிவராத்திரி மகிமை

- அ. நிறைமதி, பி.எல்.

மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மகா சிவராத்திரி என்று வழங்கப்படுகிறது. வேதங்களில் சாம வேதமும், நதிகளில் கங்கையும், ஐம்பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் தேவேந்திர னும் சிறப்பு பெற்று விளங்குவதைப் போலவே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம் ஆகும்.

சிவபெருமான், திருமால் பிரமர் காணத் திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றிய இராத்திரியே சிவராத்திரி ஆகும்.

''அரியும் யானும் முன் தேடும் அவ்
அனற்கிரி அனல
கிரி எனும்படி நின்றதால்
அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவரா த்திரி
ஆயினது! இறைவர்
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்''

எனவரும் கந்தபுராணப் பாடலில் பிரமதேவர் ''திருமாலும் நானும் திருவண்ணாமலையில் தேட, சிவபெருமான் ஒளிப் பிழம்பாக நின்ற இரவே சிவராத்திரியாகும். அச்சிவ இராத்திரியில் இறைவரை அனைவரும் வழிபட்டு உய்ந்தனர்'' என்று கூறி யிருப்பதைக் காண்கிறோம்.

சிவராத்திரி குறித்து மேலும் இரு வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. உமாதேவியார் தம் வளைக்கரத் தால் சிவபெருமானின் திருக்கண்களை மூடி மறைத்த குற்றம் தீர, ஆகம விதிப்படி சிவபிரானை நான்கு யாமங்களிலும் பூசித்து வழிபட்ட ராத்திரியே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது. திருப்பாற்கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, சிவ பெருமான் அதனை உண்டு தம்மிடற்றில் அதனை அடக்கியருளிய ராத்திரியே சிவராத்திரி எனவும், அவ் விரவில் தேவர்கள் சிவபெருமானைப் போற்றி வழி பட்டதைப் போலவே மாந்தரும் வழிபட்டுய்ய வேண் டும் எனவும் கூறப்படுகிறது.

சிவராத்திரி பற்றிய வரலாறுகள் இவ்வாறு பலவாறாகக் கூறப்படினும், சிவபெருமானின் பெருமையை இந்த ராத்திரியின்போது போற்றி உறங்காது விழித்திருந்து விரதம் இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ''சிவராத்திரி போது துயிலோம் என்ற விரதியர்'' என்பது தாயுமானவர் திருவாக்கு. சிவராத்திரி விரதப்பெருமையைச் சிவபெருமானே நந்திதேவருக்கு உணர்த்தியருள, அவரிடம் சூரியன், முருகன், எமன், மன்மதன், இந்திரன், அக்கினி, சந்திரன், குபேரன் முதலானோர் கடைப்பிடித்து நன்மைகள் பலவற்றைப் பெற்றுள்ளனர். இதனை

''இந்தநல் விரதந் தன்னைச் சிவன் நந்திக்கு
இசைத்திட உணர்ந்து செங்கதிரோன்
கந்தவேள், கதைக்கை காலன், விற்காமன்
கடவுளர் கண்ணோர்ஆ யிரத்தோன்
செந்தமிழ்கடவுள், மதி, நிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலைவர் ஆயினரால்''

என்ற பாடலால் அறிகிறோம்.

திருவாரூரை ஆண்ட முசுகுந்தன் என்ற சோழ மன்னனின் வரலாற்றோடு இணைத்துச் சிவராத்திரி யின் பெருமை பேசப்படுவது இங்கே அறியத்தக்க அற்புத வரலாறாகும். ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் தம் தேவியாரோடு அமர்ந்து சிவராத்திரி யன்று அளாவளாவிக் கொண்டிருந்தபோது அம்மரத் தில் வாழ்ந்திருந்த குரங்கு ஒன்று தானும் தூங்காமல் அவ்விரவு முழுதும் விழித்திருந்தது. தூக்கம் வராத அக்குரங்கு வில்வ இலைகளைப் பறித்து அவற்றைச் சிவபெருமான் மேலும் உமாதேவியார் மேலும் வீசிய வண்ணம் இருந்தது. ஒரு இனம் புரியாத தெய்வீக உணர்வே அவ்வாறு செய்ய அக்குரங்கினைத் தூண்டியது எனலாம்.

சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் தூங்கா திருந்த குரங்கு வீசிய வில்வ இலைகளை மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட சிவபெருமானும் அம்முசுக்கலையை (குரங்கு) முசுகுந்த சக்கரவர்த்தியாகப் பிறக்க திருவருள் புரிந்தருளினார். இறைவர் திருவருளால் சக்கரவர்த்தி யாகும் பேறு பெற்ற அக்குரங்கும், இறைவனைச் சிவராத்திரியில் பூசித்துத்தான் பெற்ற திருவருளை உலகம் யாவும் உணர்ந்து கொள்ளும் பொருட்டு

## அன்பே தெய்வம்

அனைத்து மதங்களும் அன்பே தெய்வம் எனப் பறைசாற்றுகின்றன. அன்பை மறந்து வம்பை மேற்கொள்ளும் எவரும் இறையருள் பெறமாட்டார்கள். ஔவையார் சமயசமரசம் குறித்துப் பாடியுள்ள பின்வரும் பாடலைப் பொன்னெனப் போற்றுதல் உலகோர் கடமையாகும்.

''புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் – எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தார் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.''

முசுகுந்தனாகத்தான் வாழும் காலத்திலும் குரங்கு முகத்துடனேயே வாழ்ந்திருக்க வேண்டும் என இறைவரைக் கேட்டுக் கொண்டது. இறைவரும் அவ்வாறே அருள் புரிய அக்குரங்கு முசுகுந்தச் சக்கரவர்த்தியாகத் தன் மறுபிறவியில் தோன்றிச் சோழர் குலத்தின் புகழ் இந்திர உலகத்திலும் பரவுமாறு சிறந்த ஆட்சியைப் புரிந்தமையை நமக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி முதலான நூல்கள் காட்டுவதனால் சிவராத்திரி விரதச் சிறப்பினை நாம் தெரிந்துகொள்ளலாம். குருத்ருகன் என்ற வேடன் ஒருவன் சிவராத்திரியின் போது அவனையும் அறியாமல் இருந்த விரதமே அவனை மறுபிறவியில் குகனாகப் பிறக்க அருள் புரிந்தது என்ற ஒரு வரலாறும் சிவராத்திரி விரதத்தின் பெருமையைக் காட்டுகிறது.

இனிநாம் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறையைச் சுருங்க அறிந்துகொள்வோம். சிவராத்திரிக்கு முதல்நாள் ஒருவேளை மட்டுமே உண்டு மனத் தூய்மையும் உடல் தூய்மையும் பேணி அன்றிரவு துயிலவேண்டும். மறுநாள் சதுர்த்தசி அன்று விடிகாலையிலேயே துயிலெழுந்து நீராட வேண்டும். பிறகு திருக்கோயிலுக்குச் சென்று சிவ பெருமானைத் துதித்து வழிபட்டு அன்று பகல் முழுவதும் சிவ சிந்தனையோடும் சிவத் தியானத்தோடும் தூய்மையாக இருக்க வேண்டும். வீட்டில் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மை செய்து கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். மாலையில் சிவாலயம் மீண்டும் சென்று தரிசனம் செய்ய வேண்டும். பிறகு சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் அவரவர் இல்லங்களிலுள்ள பூசையறையில் சிவபெருமானை அபிசேக அலங்காரம் செய்து அர்ச்சித்து நிவேதனம் அளித்துப் பூசிக்க வேண்டும்.

சிவபெருமானுக்கு அபிசேகம் செய்யுங்கால் பால், தயிர், தேன், சர்க்கரை, இளநீர், பன்னீர், எலுமிச்சம்பழம், சந்தனம், விபூதி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், தேன், கருப்பஞ்சாறு ஆகியவற்றைப் பயன்படுத்தவேண்டும். சிவபெருமானின் அலங்காரத்திற்குச் சந்தனம், வில்வத்தளிர், தாமரை மலர், முல்லை மலர், குங்குமப்பூ, நந்தியா வர்த்தமலர் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

சிவபெருமானை முதல் யாமத்தின்போது தாமரை மலராலும், இரண்டாம் யாமத்தின்போது துளசி இலையாலும், மூன்றாம் யாமத்தில் வில்வத் தளிராலும், நான்காம் யாமத்தில் நீலோற்பல மலராலும் அர்ச்சனை செய்தல் வேண்டுமென ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. முதல் யாமத்தில் பயற்றம்பருப்புப் பொங்கல். இரண்டாம் யாமத்தில் பாயசம், மூன்றாம் யாமத்தில் எள்ளன்னம், நான்காம் யாமத்தில் சுத்தான்னம் நிவேதனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு யாமத்திலும் தூப தீப ஆராதனைகளைச் சிறப்புறச் செய்யவேண்டும். இவ்வாறெல்லாம் முறைப்படி செய்ய இயலாமல் போனாலும், இயன்ற அளவு செய்து சிவ பெருமானை மனம், மொழி, மெய்களால் தியானித்து, இரவு முழுவதும் பூசித்து மறுநாள் காலை நீராடி பாரணை செய்து பிரசாதம் உண்ண நாமும் உய்வதோடு, நம்மூவேழு தலை முறையினரையும் உய்வித்து நலம் எய்தி வாழலாம்.

சிவபெருமான் அன்பர்தம் உள்ளத்திலும், ஆலயங்களிலும் கோயில் கொண்டிருப்பதைப் போலவே பேய் வாழும் சுடுகாடுகளையும் கூட வெறுப்பதில்லை.

''வாயே நீ வாழ்த்து கண்டாய்
பேய்வாழும் காட்டகத்தே ஆடும்பிரான் தன்னை
வாயேநீ வாழ்த்து கண்டாய்,''

என்பார் திருநாவுக்கரசர். அத்தகைய சிவபிரானை வாழ்த்தி சிவராத்திரியை ஒட்டி ''மயானக் கொள்ளையும் நடத்தப்படுகிறது. ★

# கற்கண்டுக் கந்தபுராணம்

- கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம்

## விநாயகர் வணக்கம்

ஓமென நெஞ்சில் ஓதி ஒரு செயல் செய்வார்க் கென்றும்
தாமென அருளும் வேலோன் தூயநற் சரிதம் பாட
ஆமெனத் துணிந்தேன் என்றால் அறிவினை நினைந்தோ? ஆனை
மாமுக அண்ணா! நின்றன் அருளினை நினைந்தே ஆகும். 1.

கண்ணனின் பெருமை போற்றும் காவியம் பாட மேலோன்
எண்ணுமுன் வந்துன் கொம்பை எழுதுகோல் செய்தாய் அன்று
மண்ணிலே மாந்தர் பாடி முருகனின் பெருமைப் போற்றப்
பண்ணிடும் மெய்நூல் காக்கப் பார்த்தருள் செய்வாய் இன்று. 2.

## முருகர் தோற்றம்

பூமழை வானோர் தூவப் புண்ணிய மறைகள் ஆர்ப்பப்
பூமியில் பாவம் தீர்த்துப் போற்றரும் அறத்தைக் காக்கக்
காமனை வென்றோன் ஈசன் கருணையே வடிவம் ஆகித்
தாமரை முகங்கள் ஆறாய்த் தோன்றினை பாலா போற்றி! 3.

தன்னிலை கெட்டே சூரர் புன்னிலை செய்வார் தம்மைத்
துன்னியே வெல்வான் மேருச் சரவணப் பொய்கை தன்னில்
முன்னிய முனிவோர் செய்த நற்றவ வடிவும் ஆகிப்
பன்னிரு கரங்கள் கொண்டு பிறந்தனை பாலா போற்றி! 4.

## வானோர் மகிழ்ச்சி

பிறந்தனை என்ற போதே மறந்தனர் வானோர் துன்பம்
சிறந்தனர் ஏனோர் எல்லாம் சிந்தினர் தம்தம் வீரம்
அறக்கடல் ஆனாய் உன்றன் அருட்தடம் சேராத் தீயர்
பிறருடல் இரையாய்ப் பேய்கள் உண்ணவே செய்வாய் போற்றி! 5.

பார்த்திட விழிகள் கோடி வேண்டுமே என்பார் வார்த்தை
சார்த்திட செவிகள் மேலும் கோடியே வேண்டும் என்பார்
பாரெலாம் காக்கும் உன்றன் சீரெல்லாம் காணப் பெற்றார்
கார்த்திகை மகளிர் செய்த பாக்கியம் தொழுவோம் போற்றி! 6.

## ஆறுமுகன் விளையாட்டு

பண்டமும் சிதைத்து ஆடும் பாமரர் சேய்கள் நீயோ
கிண்கிணித் தண்டைக் காலில் முழங்கவே ஓடி ஓடிப்
பண்பிலா அவுணர் அஞ்சப் பால்நிலா வெய்யோன் சேர்த்து
அண்டமும் உதைத்துப் பந்தை ஆடுவாய் ஐயா போற்றி! 7.

ஏழ்கடல் ஒருங்கு சேர்த்தும் தாரகைப் பிடித்துக் கோத்தும்
கீழுறு நாக லோகப் பாம்புகள் கயிறாய்க் கொண்டு
நீள்மலை மேருத் தேராய் உருட்டியும் செய்வாய் விந்தை
பாழுடல் எடுத்த பேர்க்குப் பரகதிப் பேறே போற்றி! 8.

ஒருவனே அறுவ னாகி ஓடியே ஒளிவாய் பின்னும்
விரும்பிய ஆட்ட மெல்லாம் ஆடுவாய் துணையும் வேண்டாய்
அருத்திவாழ் உயிர்கள் எல்லாம் புரக்குநீ தாயர் ஊட்ட
அருந்தினை அமுதும் விந்தை அருந்தமிழ் தேவே போற்றி! 9.

## உமையாள் அணைக்க ஆறு தலைகளுடன் குமரர் ஒருவடிவம் ஆகியது

காருரு வான அன்னை ஆறுரு வான உன்னை
மாருற அணைத்துக் கிண்ணம் ஊறிடும் பாலை ஊட்ட
ஒருரு வாகி மேனி மூவிரு தலைகள் தோன்ற
சீருரு வானாய் பேரால் கந்தனும் ஆனாய் போற்றி! 10.

## நாரதர் செய்த வேள்வித் தீயில் தோன்றிய ஆட்டினை வாகனமாய்க் கொள்ளுதல்

நாரதர் போற்றும் வேள்வித் தீயிடைத் தோன்றி ஞாலம்
தீரவே துன்பஞ் செய்யும் ஆட்டினை வீர வாகு
தீரமாய் பற்றி உன்முன் காட்டவும் கருணை காட்டி
ஏறிடும் ஊர்தி யாக ஏற்றனை குமரா போற்றி! 11.

**பிரமனைச் சிறையிட்டதும் சிவனார்க்கு வேதம் உரைத்ததும்**

தருக்கினால் தலைவ ணங்கா பிரமனைச் சிறையில் சேர்த்து
விருப்பினால் படைக்கும் வேலை வடிவுறச் செய்தாய் ஞானப்
பரமனும் ஒதுங்கி நின்று பிரணவப் பொருளைக் கேட்ப
உரைத்தனை சுவாமி நாதா! ஏரகம் தொழுவோம் போற்றி! 12.

விண்ணிலே முடியைத் தேடி அன்னமாய்ப் பிறந்த போதும்
கண்ணுதல் பெரியோன் என்றே கண்டனன் கலையின் நாதன்
விண்ணெனத் தலையில் குட்டி வெஞ்சிறைச் சேர்த்துப் பின்னும்
கந்தனும் சிவனே யென்று செப்பினை செவ்வேள் போற்றி! 13.

**அகத்தியர்க்கு வேதம் உரைத்தது**

சீராளன் ஊனைக் கேட்கும் சிவனாரின் சீட ராகி
ஓராடு வடிவில் வந்த வாதாபி ஊனை உண்ணும்
பேராளர் வடிவில் குள்ளத் திருவாளர் விரும்பிக் கேட்ப
சீரோடும் உயர் 'ஓம்' வேதம் விரிவோடும் உரைத்தாய் போற்றி! 14.

**கணபதிக்கு ஞானக்கனி கொடுத்தது**

பிரணவப் பொருளைக் கூறும் சரவண அறிவாய் ஈன்ற
இருவரும் அன்றோ ஞாலம் ஆயினும் அன்பால் முன்னோன்
அருந்தவே கனியைத் தந்து சிறந்திடும் விழைவால் நீயே
விரும்பிமூ வுலகும் சுற்றி வந்தனை உயிரே போற்றி! 15.

**பழநிக் கோயில் கொண்டது**

அன்பினால் ஆண்டி யாகிச் சினமென நடிப்புக் காட்டி
மன்பதை வாழும் மாந்தர் கண்டுமே நாளும் போற்றப்
பொன்மனம் கொண்ட வேலோய் இன்புற வந்திங் கேறும்
தென்திருப் பழநிக் குன்றம் தெண்டனும் செய்வோம் போற்றி! 16.

**ஔவையிடம் விளையாட்டு**

கனிமொழி ஔவைப் பாட்டி கருத்திலும் விந்தை யூட்டிக்
கனிகளில் சுடும்சு டாத கனியிரு வகையாம் என்றாய்
கனிவுடன் சங்கம் ஏறிக் கனிதமிழ் காத்தோய் வாழும்
கனிமுதிர்ச் சோலைக் கோயில் கண்களால் காண்போம் போற்றி! 17.

**தேவர்கள் வேலனை வணங்குதல்**

ஆலமே அமுதாய் உண்டு ஞாலமுன் காத்தோன் மைந்த!
வேலையுள் அரவாம் மெத்தை கண்வளர் மாயோன் நேச!
கோலமே யானைத் தோற்றம் கொண்டவன் கணேசன் தம்பி!
காலமே காக்க என்னும் தேவரைக் காண்பாய் போற்றி! 18.

**சிவனார் வேலனுக்கு ஆசி கூறுதல்**

நீறணி நெற்றி ஈசர் சீறியே அவுணர் சேனை
நீறென வாக்க ஆணை இட்டுமுன் தோளைச் சேர்ந்து
வீறுடை வேலும் தந்து வாழ்த்துகள் சொல்ல நீயும்
பேறெனச் சொல்லிப் போரை நாடுவாய் குமரா போற்றி! 19.

**முருகர் போருக்குப் புறப்படுதல்**

ஈசரின் அருளால் தோன்றும் இலட்சமாம் வீர ரோடும்
நேசராம் வீர வாகு விக்கிரம தேவர் ஆன்றோர்
பாசமாய் உன்னைச் சூழ்ந்து துணையென வருவா ரோடும்
கூசவே வீணர் வாழ்வு குரைகடல் செல்வாய் போற்றி! 20.

**அமுதவல்லி, சுந்தரவல்லியரைத் தெய்வயானையாகவும், வள்ளியாகவும் பிறக்கும்படி அருளுதல்**

மாயவன் விழியில் தோன்றி மன்றலை விழையும் மாதர்
தூயவர் அமுத வல்லி சுந்தர வல்லி மாரை
ஆயபின் அமரும் உம்மை அன்பினால் கொள்வோம் சென்று
சேயராய்ப் பிறந்து வாழச் செப்பிடும் செவ்வேள் போற்றி! 21.

**சூரர்கள் வரலாறு**

காசிப முனிவ ரோடு கூடியே மாயை என்னும்
மாசினாள் ஈன்றெ டுத்த கோடியாம் சூரர் வென்று
காசினி உயிர்கள் வாழக் கருணையே காட்ட வந்த
தேசுடை சுத்த ஞான நல்லருள் தேவே போற்றி! 22.

தம்முடற் சதையும் கொண்ட தலையனல் இட்டு யாகம்
செம்மையாய்ச் செய்வார் சூரர் தம்மையே மெச்சி ஈசன்



மும்மையும் ஆள்க வென்று தந்தமுன் வரங்கள் சிந்த
வெம்மையாம் போரை நாடும் வெற்றிவேல் குமரா
போற்றி! 23.

காலமோ யுகங்கள் நூறும் அண்டமோ ஆயி ரம்நீர்
ஆளுவீர் நம்மை யல்லால் வெல்லுமோர் சக்தி இல்லை
நீலநல் கண்டர் தந்த வரங்களில் மாற்ற மின்றிக்
கோலமே குமர னாகிச் சமர்விழை சிவனே போற்றி! 24.

**சூரன் இந்திரலோகம் வென்றது**

கோடியாம் பரிகள் பூட்டும் இந்திர ஞாலத் தேரில்
நாடியே படைகள் சூழ இந்திர நாடும் சென்று
ஆடுவான் அரக்கன் அஞ்சிப் பாடுமாம் குயிலாய் மாறி
ஓடுவான் இமையோர் வேந்தன் காத்திடும் கந்தா
போற்றி! 25.

**சூரன் இந்திராணி மேல் காமம் கொண்டது**

பொன்பதி இழந்த பின்னும் புன்மதி கொண்ட சூரன்
தன்சதி விழையும் காமக் குறிப்பினைத் தெரிந்து நோக்கி
நன்பதி காழி சேர்ந்து தண்மதி சிவனார் பாதம்
இன்சுதி பாடிப் போற்றும் இந்திரன் காப்பாய்
போற்றி! 26.

**தேவர்களுக்கு ஏற்பட்ட துயரின் காரணம்**

தருக்கினால் சிவனார் நீக்கித் தக்கனும் முன்செய் யாகம்
விருப்பினால் விழைந்த கேடாய் அரக்கரால்
தோல்விகண்டு
இருப்பிடம் இழந்தும் இன்னல் பொருப்பினில்
படுவோர் தம்மைச்
சுரந்தருள் செய்து காப்பான் சுரம்பல நடந்தாய்
போற்றி! 27.

**முருகர் தேவர்களின் துயர்நீக்கத் திருவுளம் கொண்டது**

வெம்புலி சிங்கம் யானை ஒத்திடும் மூவர் சூழத்
தம்முயிர் அஞ்சும் ஆக்கள் போல்துயர் காணும் தேவர்
முத்தொழில் முக்கண் ஈசன் முதல்வனைப் பாடிப் போற்ற
வெந்தொழில் வேட்டை யாட வந்தனை வேலா
போற்றி! 28.

**குமரர் தாருகனை வெல்லக் கருதியது**

தாருகன் பதுமன் தம்பி மாயாமா புரியின் மன்னன்
மார்பினில் திருமால் வென்று பதக்கமாய் ஆரம்
பூண்டோன்
கார்நிறக் குன்றை ஒக்கும் களிறென வடிவம்
கொண்டோன்
போர்முதல் பலியாய் கொள்ளக் குறித்தனை குமரா
போற்றி! 29.

**அகத்தியர் சாபத்தால் கிரௌஞ்சன் என்ற அரக்கன் மலையானது**

முன்குட முனிவோன் தந்த வெஞ்சினச் சாபஞ் சூழக்
கன்மலைக் குன்ற மாகிக் கலைவளர் துறவோர் தம்மைப்
புன்மதி மாயஞ் செய்து மயக்குவான் கிரௌஞ்சன் வீழ
அன்பினால் காலம் எண்ணி வந்தனை வீரா போற்றி!
30.

**கிரௌஞ்ச மலையில் சிக்கிய தோழரைக் காத்தது**

மாயமாம் குன்றில் சிக்கி மயங்குவார் வழியும் காணார்
நேயராம் வீர வாகு மற்றுள வீரர் காக்க
வாயுவாம் தேரில் ஏறித் தாருகன் கையும் கோடும்
மாயவே குன்றும் கீறித் தோழரைக் காத்தாய் போற்றி!
31.

**தாருகனை வதைத்தது**

நாரணர் பிரமர் தந்த படைக்கலம் யாவு மெய்து
தாருகன் சிவனார் தந்த அத்திரம் விடவும் கையால்
தாரென வாங்கி வேலால் சூரனின் உரம்கி ழிப்பாய்
காரெனப் பொழிந்து தொண்டர் காத்திடும் குமரா போற்றி!
32.

மூவருள் பிரமன் தன்னை வெஞ்சிறை செய்தாய் வீணர்
மூவருள் இளையோன் கொண்ட வெஞ்சிரம் கொய்தாய் வாட்டும்
மூவிரு குரோதம் வென்று பக்தரைக் காப்பாய் வெல்லும்
மூவிரு முகங்கள் கொண்ட வித்தகா வேலா போற்றி!
33.

**திருச்செந்தூரில் கோயில் கொண்டது**

வெற்றியும் திருவும் மேன்மேல் பெற்றிட விழைந்தே வேலோய்
சுற்றமாம் படைகள் சூழச் சமர்அடச் செல்லும் பாதை
கற்றவர் வியாழர் வந்து வணங்கிடக் கோயில் கொண்ட
நற்றலம் செந்தில் நாளும் பாடுவோம் நாவால் போற்றி!
34.

**வீரவாகைத் தூது அனுப்பியது**

வெம்முனைப் போருக் கேகு முன்னமும் கருணை காட்டித்
தம்முளம் மாறறிச் சூரர் காக்கவே வீர வாகு
தம்பியைத் தூது போக்கிச் சயந்தனைச் சிறையில் தேற்றி
நம்பிய அடியார் காக்கும் நல்லருள் முருகா போற்றி!
35.

மாசினம் சூழ்ந்த சூரர் அவைதனில் தூதன் தம்பி
ஆசனம் ஒன்று வேண்ட அக்கணம் கண்டோர் போற்றும்
தேசுடைச் செம்பொற் சிங்கா தனமுடன் அனுப்பி வைப்பாய்
பேசுமுன் வேலால் நேசம் பேசிடும் தேவே போற்றி!
36.

குக்கலின் வாலை ஒக்கும் குணத்தவன் தம்பி கூறும்
சர்க்கரைப் பாகை வெல்லும் சமரச வார்த்தை கேளான்
தக்கனைப் போன்றே கீழாம் வசைமொழி பலவும் செல்வான்
அக்கணம் வெகுளாய் அன்பால் குறுநகை புரிவாய் போற்றி!
37.

மாதவ முனிவோர் செய்யும் வேள்வியும் ஊறு செய்வார்
பாதகர் அவுணர் என்று அறியினும் அறத்தை உன்னிச்
சாதகம் செய்வான் சென்ற தூதுவன் வீர வாகைக்
காதகர் கொல்வான் சூழக் காத்திடும் கந்தா போற்றி!
38.

**சூரபதுமனின் மகன் பானுகோபனை வதைத்தது**

தொட்டிலில் உறங்கும் பிள்ளை வயதினாய் இருந்த போதும்
கட்டினான் கதிரால் தன்னைச் சுட்டனன் என்றே வெய்யோன்
மட்டிலா அவுணர் சூழ வந்தவன் பானு கோபன்
கொட்டமும் அடக்கித் தேவர் குலந்தனைக் காத்தாய் போற்றி!
39.

**சிங்கமுகனை வதைத்தது**


ஆயிரம் தலைகள் கொண்டோன் ஆசுரப் பதியாள் சிங்கன்
ஆய்ந்தறம் உரைக்குஞ் சொல்லை அறிவிலன் கேளா தேச
மாய்தலே நலமென் றெண்ணி முன்அட வந்தான் வீரன்
மாய்த்துமை ஏறும் சிங்க வாகனம் செய்தாய் போற்றி!
40.

**சேவலும் மயிலுமாகிய சூரனை அடக்கி ஆண்டது**

நீர்நிறை கடலின் மீதில் மாயையால் மரமாய் நின்ற
சூரனை வேலால் எய்ய சேவலும் மயிலு மென்னும்
ஈருரு வாகிப் பின்னும் ஆர்ப்புடன் வருவான் சூரன்
பார்வையில் அடக்கி மேலாம் பரகதி தந்தாய் போற்றி!
41.

**சேவலைக் கொடியாய் கொண்டது**

மூவரும் காண்டற் கரிதாம் மூர்த்தியாம் உருவம் தீய
பாவியும் காணப் போரில் காட்டினை என்றால் ஐயா!
தாவருள் பாடும் தூய அடியவர் பெறுதல் உண்மை
சேவலைக் கொடியாய்க் கொண்டு குற்றமும் பொறுத்தோய் போற்றி!
42.



**மயிலை வாகனமாய் கொண்டது**

சீறிடும் அவுனன் மேனாள் மால்முதல் மேலோர் எல்லாம்
கூறிடும் பணிசெய் ஏவல் தொண்டராய் மதித்தான் நீயோ
நீறிடும் அடியார் எல்லாம் போற்றியே மயிலை வாழ்த்த
ஏறிடும் ஊர்தி என்றே ஏற்றனை வேந்தே போற்றி!
43.

பாலனும் சமரில் நிற்கும் வலியனும் தானோ வென்று
கேலிகள் செய்தார் சூரர் கோலமா மகளிர் பூண்ட
தாலிகள் அறுந்து குன்றாய் வளர்ந்துநின் வீரம் சாற்ற
வேலினால் வென்றாய் வெற்றித் தோளினாய் போற்றி!
போற்றி! 44.

**தெய்வானைத் திருமணம்**

பெய்துநீர் வார்த்தும் உன்சீர் போற்றிடும் விண்ணோர் வேந்தன்
தெய்வநல் யானை என்னும் தாழ்குழல் பொன்கை சேர்ப்பச்
செய்தவத் தூயோர் பெற்ற கண்ணிணைப் பயனாய்க் காணச்
செய்தனை மணமும் போற்றும் தென்பரங்குன்றம் போற்றி! 45.

**ஸ்ரீவள்ளித் திருமணம்**

விரும்பிமுன் அருளால் தந்த வரத்தினால் பிள்ளை யாகி
அருந்தவம் செய்த நம்பி இராசனின் மனையில் வாழும்
கருங்குழல் வள்ளிக் கான மயிலினை மணமும் செய்வான்
விருத்தனும் வேட னும்ஆய் வந்தனை வேலா போற்றி!
46.

வானவர் வணங்கி வேண்ட அவுணரை வென்ற வீரா!
கானவர் மகளின் மீதில் கொண்டதாம் அன்பில் வேண்டி
ஆனைநல் முகத்தின் அண்ணல் வந்தருள் புரிந்து வாழ்த்த
ஆனதுன் மன்றல் போற்றும் திருத்தணிக் குன்றம் போற்றி! 47.

காதலால் ஞாலம் வாழும் மாந்தருள் பேதம் இல்லை
சாதியைச் சொல்வார் நெஞ்சில் நீதியாம் நேர்மை இல்லை
வேதமாம் நெறியைக் காட்ட வள்ளியை மணமும் செய்தாய்!
ஓதிடும் சமய பேத வெறியெலாம் கடிவாய் போற்றி!
48.

**முருகரை வாழ்த்துதல்**

கந்தனே கடம்பா போற்றி! கார்த்திகைக் குமரா போற்றி!
சுந்தர முருகா போற்றி! சுப்பிர மணியா போற்றி!
இந்திரர்க் கருள்வாய் போற்றி! ஈனரை அடுவாய் போற்றி!
வந்தனை செய்வார் போற்றி! வந்தெனை ஆண்டாய் போற்றி! 49.

ஓராறு முகங்கள் போற்றி! ஈராறு கரங்கள் போற்றி!
தார்சூடும் தோள்கள் போற்றி! தோள்சேர்ந்த தாயர் போற்றி!
கார்கண்டு ஆடும் தோகை சூர்கண்டு வெல்லும் கூர்வேல்
பாராளும் சீர்மை போற்றி! நீவாழும் கோயில் போற்றி!
50.

**நூற்பயன்**

கற்கண்டுக் கந்த புராணம் கருத்தோடு நாளும் ஓதி
நற்றொண்டு செய்வார் ஞாலம் விருந்துண்டு வளமாய் வாழ்வர்
வெற்பீண்டி வாழும் வேலோன் விருப்போடு மயிலை ஏவிப்
பொற்பாதம் வைப்பான் அன்ன அடியாரும் போற்றி போற்றி! 51.

★ ★ ★

# பவானி அருள்மிகு சங்கமேசுவரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்கள் வரலாறு

(திருக்கோயில் வெளியீடு)

**1. முன்னுரை**

தெய்வ மணம் கமழுவது நம் செந்தமிழ் நாடு. இந்த நாட்டில் கொங்கு நாட்டுத் திருத்தலங்களாகத் தேவார மூவராலும் பாடல் பெற்ற தலங்கள் ஏழு. அவை அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருநணா, திருச்செங் கோடு, திருவெஞ்சமாக் கூடல், திருப்பாண்டிக் கொடு முடி, கருவூர் ஆகும். இவ்வேழு தலங்களையும் தொகுத்துப் பின்வரும் ஒரு பழம் பாடல் கூறும்.

''ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணா - மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதல''
நெஞ்சமே நித்தம் நினை''.

இதனையே கோவைக் கிழார் சி.எம். இராமச் சந்திரன் செட்டியார் அவர்கள் ஓர் அழகிய பாடலில் கொங்கேழு தலங்களின் பெருமையைக் கூறுகின்றார்.

''திருமுருகன் பூண்டியொடு திருநல் அவி நாசி
திருநணாவும் கொடுமுடியும் திருச்செங்கோடிவைகள்
கருவுருவா நிலைவெஞ்சன் கூடலிவை ஏழும்
கவின்பேரூர் முதல்வைப்புத் தனிநகர்கள் எமதே!''

என்பது அப்பாடலாகும். அவற்றுள் 'பவானி கூடல்' எனப்படும் 'திருநணா' என்னும் இந்தத் தலம் பழமையும், பெருமையும் உடையது. திருஞான சம்பந்தப் பெருமானால் பாடல் பெற்ற அருமையும் உடையதாகும்.

இந்தத் திருநணாத் திருக்கோயிலை ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கொங்கு நாட்டுச் சிற்றரசர்களான கெட்டி முதலியார் பரம்பரையினர் புதுப்பித்தனர். காவிரி-பவானி கூடல் பகுதியில் கருங் கல்லால் செப்பமுற அமைக்கப்பட்டிருப்பது இவ் வாலயம். திருஞானசம்பந்தரால் ''ஈட்டுத் துயரறுக்கும் எம்மான் இடம்'' என்று அருளிச் செய்யப்பட்டது இத்திருக்கோயில். அருணகிரிநாதரும் இங்கு எழுந் தருளியுள்ள முருகப் பெருமானைத் தமது திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார்.

புராண வரலாற்றையுடையதும் ஸ்ரீ வேதநாயகி யம்மன் ஸமேத ஸ்ரீ சங்கமேஸ்வரப் பெருமான், ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் ஸமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் ஆகிய இம்மூர்த்திகளின் சந்நிதிகளினால் உலகிற்குச் சைவ வைணவ சமரசத்தைப் புகட்டி வருவதும் இவ்வாலயம் ஆகும்.

வட இந்தியாவில் கங்கை, யமுனை, சரசுவதி என்னும் மூன்று ஆறுகள் கூடும் இடம் 'திரிவேணி சங்கமம்' எனப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது. அது போலவே இந்தத் தலமும் காவிரி, பவானி, அமுதநதி என்னும் மூன்று ஆறுகள் கூடும் இடத்தில் அமைந்து புகழ் மிக்க புண்ணியத் தலமாகப் பொலிந்து விளங்கு கின்றது. இதனால் இத்தலத்திற்குத் 'தட்சிணப் பிரயாகை' என்னும் ஒரு பெயர்வழங்குகிறது. அதனால் இங்குள்ள இறைவனுக்குக் 'கூடுதுறை நாதர்' என்றும், 'சங்கமேச வரர்' என்றும் பெயர்கள் வழங்கும்.

இந்தத் தலமானது சங்ககிரி, நாககிரி, மங்கல கிரி, வேதகிரி, பதுமகிரி என்னும் ஐந்து மலைகளுக்கு நடுவில் இருப்பதால் 'பஞ்சகிரி மத்தியப் பிரதேசம்' எனவும் குறிக்கப்பெறும். இங்கே காயத்திரி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், சரசுவதி தீர்த்தம் முதலிய பல தீர்த்தங் கள் உள்ளன. ஆடிப் பதினெட்டாம் பெருக்கிலும், மாதப் பிறப்பு, சங்கராந்தி, புண்ணிய காலம், கிரகண காலம் ஆகியவற்றில் பெருந்திரளான மக்கள் வந்து கூடிச் காயத்திரி தீர்த்தத்தில் நீராடி வழிபட்டுச் செல்கின்றனர். இத்தலத்திற்குப் 'பதரி' என்னும் இலந்தை மரம் தல விருட்சமாகத் திகழ்கிறது. ஆதலின் இதனை வடக்கே உள்ள ''பதரிகாசிரமம்'' என்னும் புண்ணிய தலத்திற்குச் சமமானதென்று சான்றோர்கள் கருதித் 'தென் பதரிகா சிரமம்' என அழைத்தனர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த மண்ணில் நமது காலடி பட்டாலே பெரும்பேறு கிடைக்கும்.

## இருப்பிடம்

பவானி நகரம் ஈரோடு இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 15 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. பவானி செல்வதற்கு இரயிலில் செல்பவர்கள் ஈரோடு சந்திப் பில் இறங்க வேண்டும். அங்கிருந்து வடமேற்காகப் பேருந்திலோ, காரிலோ செல்லலாம். சேலத்திலிருந்து வந்தால் 55 கி.மீ. மேற்கே வரவேண்டும். கோவையி லிருந்து வடகிழக்காக 100 கி.மீ. வந்தால் பவானி

ாற்றைக் கடந்து வரவேண்டும். இக்கோயில் மேட்டூரி ிருந்து 40 கி.மீ. தொலைவில் தென்திசையில் ஈரோடு செல்லும் வழியில் உள்ளது. அருள்மிகு சங்கமேசுவரன் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்களைப் பெற்றுள்ள பவானி நகரம், பவானி வட்டம், ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.

## ஊரும் பேரும்

வடகரை நாட்டு ஊர்த்தொகைப் பாடல் பவானியை 'வானி' என்றே குறிப்பிடும். வானி என்பது பவானியாற்றின் பழம் பெயர். வானி காவிரியில் கலப்பதால் 'வானி கூடல்', 'பவானி கூடல்' என்ற பெயர்களும் ஏற்பட்டன. கொங்கு 24 நாடுகளுள் ஒன்றான பூவானி நாட்டின் பெயரே பவானி என்று மாறியது என்பதும், பவானியாற்றின் பழம் பெயர் பூவானியாறுதான் என்பதும் புலவர் அ.மு. குழந்தை அவர்களின் கருத்தாகும். திருஞான சம்பந்தர் தேவாரம் பாடிய காலத்தில் இவ்வூருக்கு நணா என்ற பெயர் வழங்கியது. 'திருநணா' என்று இக்காலத்தும் இத் தலத்தைக் குறிப்பர் (திருநணாச்சிலேடை வெண்பா - புலவர் குழந்தை).

''கேட்டார் வினை தீர்க்கும் திருநணாவே''

என்று திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் கூறுகின்றார். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபட்டோருக்கு எவ்விதத் தீங்கும் நண்ணாது (அணு காது) என்ற கருத்தில் இவ்வூர் நண்ணா, நணா என் றாயிற்று. இறைவன் பெயர் 'நண்ணாவுடையார்' என் றும் கூறப்பெறும். தலபுராணம் 'நண்ணாவில்' வீற் றிருந்த சிவக்கொழுந்து' என்று இறைவனைக் குறிப் பிடும்.

பதிற்றுப்பத்தினுள் ஏழாம் பத்தின் பதிகத்தில் குறிப்பிடப்பெறும் 'நன்றா' என்னும் குன்று பவானி அருகே வடக்கே உள்ள ஊராட்சிக்கோட்டை மலை யாகத்தான் இருக்க வேண்டுமென்பது அறிஞர் சிலரின் கருத்தாகும். திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் இவ்வூர் 'திருநணா' என்றே குறிப்பிடுகின்றார் என்பதைக் கண்டோம். சங்க காலத்தில் 'நன்றா' என்று வழங்கிய பெயர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் 'நணா' என்று மாறி விட்டது.

இவ்வூருக்கும் தலபுராணம் ஒன்று உண்டு. அதன் ஆசிரியர் 'காசியில் மேலாய கடிநகர்' என்கிறார். அதே போலச் சதகத்தின் ஆசிரியர் 'வாவியகாசி' என்று கூறுவது கருதத்தக்கது. தலபுராண ஆசிரியர் வேறொரு பாடலில் 'இளைய காசி' என்பர்.

''இளைய காசியும் வதரியா ரணியமும்
ஏற்ற மார்தென் னாட்டில்
விளையும் நலந்திரி வேணிசங் கமுமாய்
விளங்கு றுதிரு நண்ணா
உளையும் அன்பருக் கருள்சங்க மேச்சுரன்
உமைம றைநா யகியங்
களையும் சிற்பரன் நிலவிய பெருந்தவம்
அடைந் தவர்பெரி யோரே''

என்பது அத்தலப் புராணப் பாடலாகும்.

## ஊரின் பெயர்

திருஞான சம்பந்தராலும், அருணகிரிநாதரா லும் பாடப்பெற்ற இவ்வூர் திருநணா, பவானி, பவானி கூடல், முக்கூடல், சங்கம க்ஷேத்திரம், பராசர க்ஷேத்திரம், தட்சிண அளகை (பிரயாகை), வக்கிரபுரம், பதரிவனம், வீரபுரம், விஜயாபுரி என்றெல்லாம் பேசப்பெறும். இவ்வூரில் உள்ள கோயிலின் தலவிருட்சம் இலந்தை மரம்.

## இறைவன் பெயர்

சங்கமேசுவரர், சங்கமுக நாதர், மருத்துலிங்கம், வக்கிரேசுவரன், அளகேசன், வானிலிங்கேசுவரன், நட்டாற்றீசுவரன், திருநண்ணாவுடையார் என்பன வாகும்.

## இறைவியின் பெயர்


சங்கமேசுவரி, வேதநாயகி, மருத்துநாயகி, வக்கிரேசுவரி, பண்ணார்மொழியம்மை, பந்தார் விர லம்மை என்பனவாகும்.

## ஒரு தனிச் சிறப்பு

எல்லா ஊர்களிலும் மூர்த்திச் சிறப்பு உண்டு. ஆனால் இக்கோயிலுக்குத் தனிச் சிறப்பொன்று உண்டு. சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும் இடையில் முருகன் சந்நிதி இருக்கிறது. அதனால் இது சோமாஸ் கந்தமூர்த்திச் சிறப்புடையது ஆகும்.

## சிறப்பான மூர்த்திகள்

இராஜ கணபதி, முத்துக்குமார சுவாமி எனும் கலியாண சுப்பிரமணியர், சுரஹரேசுவரர். ஜோதி லிங்கம், காசி விசுவநாதர், விசாலாட்சி, அமிர்தலிங்கம், ஆதிகேசவப் பெருமாள், சௌந்தரவல்லித் தாயார், இலக்குமி நரசிம்மர், ஜேஷ்டாதேவி (மூதேவி) முத லானோர் ஆவர். இத்தலத்தைத் 'திருமுக்கூடல்' என்றும், இக்கோயில் நிருவாகிகளைத் திருமுக்கூடல் 'தானத்தார்' என்றும் கல்வெட்டுகளில் கூறுவர்.



## 2. கோயிலின் அமைப்பும் சிறப்பும்

### 1. இராஜகோபுரம்

காவிரியும் பவானியும் கலக்கும் அந்த அழகிய இடமே முக்கூடல். இங்கே காவிரியின் மேல் கரையில் சங்கமேசுவரர் கோயில் அமைந்து இருக்கிறது. இக் கோயிலுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. வடக்கு நோக்கியே பிரதான வாயிலான இராஜகோபுரம் உள்ளது. இது ஐந்து நிலைக் கோபுரமாகும். இந்த இராஜகோபுரம் மிக உயரமானதும், அழகிய வேலைப் பாடுகளுடன் கூடிய சுதையாலான சிற்பங்களைக் கொண்டதும் ஆகும்.

இச்சிற்பங்கள் புராணக் கதைகளையும் தேவாரக் கதைகளையும் விளக்குவன போல அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, சிவபெருமான் சுந்தரரை ஓலையைக் காட்டித் தடுத்தாட் கொண்டதுவும், மீனாட்சி கல்யாணமும், சுந்தரர் முதலை உண்டபாலனை மீட்பதும், பாண்டியன் மாணிக்க வாசகருக்குப் பணமுடிப்பு அளிப்பதும், அவரது குரு உபதேசமும் குறிப்பிடத்தக்கவை. இந்த இராஜகோபுரத்தை ஒட்டி மேல்புறத்தில் 'வைகுந்த (சொர்க்க) வாசல்' ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இவ்வாசல் ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி அன்று திறக்கப்படுகிறது. ஆண்டு தோறும் இலட்சக் கணக்காக மக்கள் இவ்வாயில் வழியாகச் சென்று பெருமாளை வணங்கிப் பெரும் பேறு அடைகின்றனர்.

இராஜகோபுரத்தின் முன் உள்ள முற்றத்தில் சிறிய கோபுரத்துடன் கூடிய ஒரு தனிக் கோயிலில் கோட்டை விநாயகரும், மற்றொரு கோயிலில் கோட்டை அனுமனும் காட்சியளிக்கிறார்கள். மேலும் இங்குள்ள முற்றத்தில் நந்திகேசுவரர் ஓர் மண்டபத்தில் காட்சி யளிக்கின்றார். இக்கோயில்களுக்குக் கீழக்கே ஓர் அழகிய பூஞ்சோலை (நந்தவனம்) உள்ளது. அதன் நடுவில் ஒரு அழகிய திருமண மண்டபமும் கட்டப் பட்டுள்ளது. இக்கோயில்களுக்கு மேல் பக்கத்தில்தான், முன்பு காரோ என்னும் ஆங்கில கலெக்டர் தங்கியிருந்த பங்களா உள்ளது. இது இப்போது நெடுஞ்சாலைத் துறையினரின் பயணியர் விடுதியாக உள்ளது.

### ஆதிகேசவப் பெருமாள் கோவிலும், தாயார் சந்நதியும்

மேற்கூறிய இராஜகோபுரத்தைக் கடந்து உள் புறம் சென்றால் வாயிலின் மேற்புறம் இராஜ விநாயகரும், கீழ்ப்புறம் முத்துக்குமாரசுவாமியும் காட்சியளிக்கின்றனர். இங்குள்ள முருகர் கோயிலுக்குக் கீழ்ப்புறம் கோயில் அலுவலகம் அமைந்துள்ளது. இதற்கு நேர் எதிரில் மேற்கு வாயிலும் யானைக் கொட்டடியும் உள்ளன. அடுத்து மேல்புறத்தில் ஆதி

கேசவப் பெருமாள் கோயிலும், சௌந்தரவல்லித் தாயார் கோயிலும் உள்ளன. இவ்விரண்டு சந்நிதிகளுக்கு இடையில் யோக இலக்குமி நரசிம்மர் சந்நிதி உள்ளது. இங்குள்ள ஆதிகேசவப் பெருமாள் கிழக்கு நோக்கி புள்ளார். இப்பெருமான் சங்கு சக்கரதாரியாக திவ்ய தரிசனமளிக்கின்றார். இப்பெருமாள் கோவிலில் கரு வறை, அர்த்த மண்டபம். மகாமண்டபம் ஆகியவை உண்டு. இந்த மகாமண்டபத்தை 'ரங்க மண்டபம்' என்றும் கூறுகின்றனர். இது ஒரு விசாலமான மண்டபம். இம்மண்டபத்தில் நவநீதி கிருஷ்ணன், நம்மாழ்வார், இராமானுஜர், அனுமன் ஆகியோர் எழுந்தருளி யுள்ளனர். மேலும் இம்மணடபத்தின் வடபால் உருக்குமணி, சத்யபாமையுடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சந்தான கோபாலன் மிகவும் விசேடமானவர். இந்த ரங்க மண்டபத்தின் வடபால் வேணுகோபால சுவாமிக்கு ஒரு சந்நிதி உண்டு. இங்கும் உருக்குமணி, சத்திய பாமையுடன் கூடிய அழகிய வேலைப்பாடமைந்த வேணுகோபால சுவாமியின் காட்சி கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரத்தக்கது. ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலேயே சௌந்தரவல்லித் தாயாருக் கும் தனியாக ஒருசந்நிதி உண்டு. இங்கு அம்மன் அழகிய திருக்கோலம் கொண்டு பக்தர்களுக்கு கருணையைப் பொழிகின்றாள். அவரது கடைக்கண் பார்வை பட்டாலே போதும், வளம் கொழிக்கும், நலம் பெருகும்.

ஆதிகேசவப் பெருமாள், சௌந்தரவல்லித் தாயார் சந்நிதிகளுக்கு முன்புறம் ஒரு பெரிய விசால மான திருமண மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. இத்திருமண மண்டபத்தின் மீது மூன்று பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள ராமர், இலட்சுமணர், சீதை, அனுமன் ஆகியோர் சிவனை வணங்கும் சிற்பமும், கஜலட்சுமி சிற்பமும், தசாவதாரச் சிற்பங்களும், ராமர் பட்டாபிசேகச் சிற்பமும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சிகளாகும். இம்மண்டபத்தின் முன் புறம் கருடாழ்வார் சிலை, கொடிக்கம்பம். தீபஸ் தம்பம் ஆகியவை உள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள பெருமாளைத் திருஞான சம்பந்தப் பெருமான் தமது தேவாரப் பதிகத்தில் ''பூமியளந்தானும் போற்ற மன்னி'' என்று புகழ்ந்து பாடியுள்ளார். இப்பாடல் சம்பந்தரின் இரண்டாம் திருமுறையில் 'திருநணாப்' பதிகத்தில் ஒன்பதாவது பாடலாக மிளிர்கிறது.

இராஜகோபுர வாயிலில் இருந்து நேர் எதிரே நோக்கினால் நம் கண்ணில் படுவது ஒரு சிறிய விநாயகர் சந்நிதியாகும். இச்சந்நிதி மண்டபத்தின் முன்புறம் இரண்டு தூண்கள் உள்ளன. இந்தத் தூண்களில் இக் கோயிலை முன்பு புதுப்பித்த இம்மடிகெட்டி முதலி யார், சின்னம்மை ஆகியோரின் சிலைகள் உள்ளன. மேலும் ஆதிகேசவப் பெருமாள், வேதநாயகியம்மன் கோயிலுக்கு நேர் எதிரில் ஒரு பெரிய விசாலமான கோடியர்ச்சனை மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் வெளிப்புறத்தில் பழைமையான சிற்பத் தூண்கள் அழகுறப் பொருத்தப்பட்டுள்ளன.

சௌந்தரவல்லித் தாயார் கோவிலை ஒட்டித் தென்புறம் திருமுறைக் கழகத்தின் அலுவலகம் உள்ளது. இக்கழகத்தின் முயற்சியினால் ஆண்டுதோறும் தேவாரப் பாடல்கள் பாடவும், பக்திப் பிரசங்கங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இக்கழகத்தவரின் அரிய சேவை பாராட்டற்குரியது.

திருமுறைக் கழக அலுவலகத்தின் தென்பால் கீழ்மேலாக அமைந்துள்ள நீண்ட கோவில் வேத நாயகியம்மன் கோவில் ஆகும். இங்கு வேதத்தின் நாயகியே தனது அருட்பார்வையால் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றாள். இதுவே இங்குள்ளவற்றில் மிகப் பழமையான கோவிலாகும். இக்கோவிலில் ஒரு கரு வறையும், அர்த்த மண்டபம், மகாமண்டபம், திருநடை மாளிகை, பள்ளியறை, சிற்ப மண்டபம் ஆகியவை உள்ளன. கருவறையில் வேதநாயகி அம்மன் எழில் கொஞ்சும் வண்ணம் கருணை பொழியும் கண்களுடன் காட்சி தருகின்றார். அர்த்த மண்டபத்தின் முன்புறம் வலப்பக்கம் விநாயகரும் இடப்பக்கம் நாகரும் உள் ளனர். இக்கருவறையைச் சுற்றியுள்ள நடைமாளிகை வழியே வலம் வந்தால் அங்குள்ள தேவ கோட்டங்களில் உமாதேவி, மகேஸ்வரி, கௌரி, ப்ராமி, வைஷ்ணவி ஆகியோரைக் காணலாம். வடபுறம் சண்டிகேசுவரிக்கு ஒரு சிறிய சந்நிதி உண்டு. இங்கும் விநாயகருக்கு ஒரு தனி சந்நிதி உண்டு.

இங்குள்ள மகா மண்டபத்தின் சுவர்களில் அபிராமி அந்தாதிப் பாடல்கள் கடப்பைக் கற்களில் பொறிக்கப்பட்டுப் பதிக்கப்பெற்றுள்ளன. அவை களுள்,

''தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில்
வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமிடைக் கண்களே!''

என்ற பாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மண்டபத்தின் வடபால் உள்ள பள்ளி யறையில்தான் கலெக்டர்காரோதுரைமகனார் கொடுத்த தந்தக் கட்டில் காணப்படுகிறது. விசேஷ நாட்களில் தந்தக் கட்டிலில் அமர்ந்து அம்மன் காட்சியளிக்கின்றார்.

முன்பக்கத்தில் உள்ள சிற்ப மண்டபம் பதி னெட்டுத் தூண்களைக் கொண்டது. இம்மண்டபத்தில் கெட்டி முதலியார் காலத்தில் செதுக்கப்பட்ட அற்புத மான தூண்கள் உள்ளன. திருவரங்கத்திலுள்ள ராய மண்டபத்தில் உள்ள சிற்ப வேலைப் பாடமைந்த தூண் களுக்கு ஒப்பானவை. இவற்றில் யாளியோடு போரிடும் குதிரை வீரர்கள், சிறுத்தையோடு போரிடும் குதிரை வீரர்கள் போன்ற சிற்பத் தூண்கள் சிறப்புமிக்கவை. இங்குள்ள சிரிக்கும் சிலை, கல் விரிக்கும் கலை எனப் போற்றப்படுகிறது. இத்தூணிலுள்ள மங்கை நல்லாள் கைகூப்பி வணங்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். இச்சிலை மீது நீரை ஊற்றினால் சிரிப்பது போலக் காட்சி தருகிறது என்பர்.

பிறிதொரு தூணில் கொட்டிக் கொடுக்கும் கெட்டி முதலியாரின் சிற்பமும். மற்றொரு தூணில் சின்னம்மையின் சிற்பமும் வடிக்கப்பெற்றுள்ளன. மேலும் இம்மண்டபத்தில் உள்ள விதானத்தில் உள்ள தாமரை மலரில் கிளிகள், கெட்டி முதலியாரின் சின்ன மானவண்ணத் தடுக்கு, வாடாமாலை, மூவேந்தர்களின் சின்னமான வில், புலி, கயல் மற்றும் கோலாட்டக் காட்சிகள், 12 மாதங்களுக்கான ராசிகள் போன்ற சிற்பங்கள் எல்லாம் கண்டு இன்புறத்தக்கன. இங்கேயே இக்கோயிலைத் திருப்பணி செய்தது பற்றிய கல்வெட் டொன்று உள்ளது குறிப்பிடத்தக்கது. இம்மண்டபத்தை யொட்டி முன்புறம் பலிபீடம், கொடிக்கம்பம் ஆகியவை உள்ளன.

வேதநாயகி அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரில் கிழக்கு மதில் சுவரில் மூன்று துவாரங்கள் உள்ளன. அந்தத் துவாரங்கள் எப்படி ஏற்பட்டன என்பதற்கு ஒரு சுவையான கதையையும் கூறுகிறார்கள். கும்பினியார் (ஆங்கிலேயர்) இந்தியாவை ஆண்ட பொழுது இந்தப் பவானிதான் சேலம், கோயம்புத்தூர், மாவட்டங் களுக்குத் தலைநகரமாக இருந்திருக்கிறது. 1802 ஆம் ஆண்டில் இங்கு கலெக்டராக இருந்தவர் வில்லியம் காரோ என்னும் துரை மகனார். இவர் பத்து, பனி ரெண்டு ஆண்டுகள் இங்கு இருந்திருக்கிறார். அவர், இப்போது பிரயாணிகள் விடுதியாக இருக்கும் பங்களாவிலேயே தங்கி வாழ்ந்திருக்கிறார். தினசரி சங்கமேசுவரர் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருவதையும், கூடுதுறையில் குளிப்பதையும் கண் டிருக்கிறார். அதோடு வருபவர்கள் வேதநாயகியின் அருளினைப் பற்றி அடிக்கடி பேசுவதையும் கேட் டிருக்கிறார்.

அவருக்கு ஓர் ஆசை. இந்த வேதநாயகியைத் தரிசிக்க வேண்டும் என்று. இவரோ பிற மதத்தினர். கோயிலுக்குள் வர அனுமதிக்கப்பட மாட்டார். இவரது ஆவலை அறிந்த அந்தத் தாலுகா தாசில்தார் அம்பிகை யின் சந்நிதிக்கு நேரே மதிலில் மூன்று சிறு துவாரங்கள் செய்து அவற்றின் வழியாக அலங்கரிக்கப்பட்ட அம்பிகையைக் கலெக்டர் காண வகை செய்திருக்கிறார். அம்பிகையின் வடிவழகைக் கண்டு வழிபாடு செய்து வந்திருக்கிறார் கலெக்டர் துரை. இப்படியே தினசரி சிறு துளை வழியாக அம்மையாரைக் கண்டு தரிசித்து வந்திருக்கிறார் காரோ துரை.

ஒரு நாள் இரவு தம் பங்களாவில் தூங்கிக் கொண் டிருக்கும்போது வேதநாயகியைப் போல அலங்காரம் செய்து கொண்ட பெண் ஒருத்தி தம்மை வெளியே போகும்படி சொன்னதாகக் கனவு கண்டிருக்கிறார். அப்படியே படுக்கையை விட்டு எழுந்து வெளியேயும் வந்திருக்கிறார். என்ன அதிசயம்! இவர் வெளி வந்த சில நிமிஷங்களில் பங்களா கூரையே இடிந்து விழுந் திருக்கிறது. அன்னையின் அருளை வாழ்த்திய கலெக்டர் துரை, தந்தத்தாலேயே ஒரு கட்டில் (பல்லக்கு ஊஞ்சல்) செய்து அவர்தம் காணிக்கையாக வழங்கியிருக்கின்றார். கட்டிலில் தம் பெயரையும் பொறித்து வைத்திருக் கின்றார். இக்கட்டில் காணிக்கையாகக் கொடுக்கப் பட்ட தேதி 11.1.1804 என்று கட்டிலில் இருந்து தெரி கிறது. வில்லியம் காரோ என்ற ஆங்கிலேயர் அம்பிகை யின் அருளாற்றலை வியந்து தந்தத்தால் செய்த பள்ளி அறைக் கட்டிலை அளித்திருப்பது அறிந்து மகிழத் தக்கது. தென்னாடுடைய சிவன்' எந்நாட்டவர்க்கும் இறைவர் என்றார் மாணிக்கவாசகர். அப்பாலும் அடி சார்ந்த திருக்கூட்டமும், அடியவர்கள் கூட்டத்துடன் சேர்ந்தவர்களே. இந்த முறைப்படி, பிற மதத்தினரையும் தம் அடியவர்களாகச் சேர்த்துக் கொள்ளும் சங்கமேசு வரர், வேதநாயகியின் பெருமைதான் என்னே!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த இந்தச் சம்பவத்தை முன்னரே அறிவிப்பார் போல ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே திருஞானசம்பந்தர் பாடியிருக்கிறார்.

''வில்லார் வரையாக, மாநாகம்
நாணாக வேடங் கொண்டு
புல்லார் புரம்மூன்றும் எரித்தார்க்கு
இடம்போலும் புலியும்மானும்
அல்லாத ஜாதிகளும் அங்கு அழல்
மேல் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா அருநெறிக்கே செல்ல
அருள்புரியும் திருநணாவே!''

என்பது அவர் தேவாரம். அல்லாத சாதிகள் பட்டியலில் காரோ துரையும் சேர்ந்தவர்களே. இங்குள்ள சங்கமேசு வரர் - வேதநாயகி தாம் பாடல் பெற்றவர்கள் என்று இல்லை. முருகனும் அருணகிரிநாதரால் பாடல் பெற்ற

வரே. மேற்கூறிய மூன்று துவாரங்கள் கீழ் மதிலில் இருப்பதை இன்றும் காணலாம். இத்துவாரங்களின் வழியாகப் பார்த்தால் கொடிமரம், சிற்ப மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் தாண்டிக் கருவறையில் இருக்கும் அம்பிகையின் அருள்மிகு தோற்றத்தைத் தரிசிக்கலாம்.

வேதநாயகி அம்மன் கோயிலை ஒட்டித் தென்புறம் இருப்பது முருகர் கோயிலாகும். ஸ்ரீ சண்முக சுப்பிரமணியர் என்று அழைக்கின்றனர். இங்கு வீற்றிருக்கும் முருகப் பெருமானை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார். அப்பாடல் ஓர் கடப்பைக் கல்லில் எழுதப்பட்டு இங்குள்ள சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது. இச்சந்நிதியின் முன்புறம் மயில் வாகனமும் ஒரு மேடையில் கொடி மரமும் உள்ளன. முருகர் சந்நிதியை ஒட்டித் தென்புறம் அமைந்திருப்பது 'விசாலாட்சி' ஸ்ரீகாசி விசுவநாதர் எழுந்தருளியுள்ள சந்நிதியாகும். இது ஜோதிலிங்கம் எனக் குறிக்கப்படுகிறது. இதனையொட்டி அமைந்திருப்பது மிகப் பழமை வாய்ந்த சுரஹரேஸ்வரர் சந்நிதி. இவர் பிணி தீர்க்கும் பெம்மான். உடல் நலமற்றோர் இவ்விறைவனை வேண்டிக் கொண்டால் விரைவில் குணமடைவர். இவர் மூன்று காலும், மூன்று கைகளும், மூன்று தலைகளையும் உடையவர். கடுமையான சுரநோய் வந்தவர்கள் அந்தப் பெருமானைப் பிரார்த்தித்து நோய் தீர்க்கிறார்கள். செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய தினங்களில் மிளகுரசம், சுண்டல், அரைக்கிரை ஆகியவற்றை வைத்து நைவேத்தியம் செய்தால் கடுமையான வெம்மை நோய் நீங்கும் என்று நம்புகின்றனர்.

சுப்பிரமணியர், சுரஹரேசுவரர் சந்நிதிகளுக்கு நேர் எதிரில் மதிலின் கிழக்கு வாயில் உள்ளது. இதன் வழியாகக் காவிரியாற்றை அடையலாம். இங்கு அருமையான படித்துறை உண்டு. இங்குதான் சூரிய தீர்த்தம் உள்ளது. இங்குள்ள மதிலை ஒட்டித் தென்திசை சென்றால் காயத்திரி சந்நிதியும், கூடுதுறையும் உள்ள இடங்களை வந்தடையலாம். மேலே கூறிய காயத்திரி சந்நிதி மிகவும் பிரலபமானது. இங்கே காயத்திரி லிங்கர் வீற்றிருக்கிறார். இக்கோயிலின் அருகில் உள்ளது காயத்திரி தீர்த்தம் - இதனைக் ''காயத்திரி மடு'' என்றும் கூறுவர். இங்குள்ள காயத்திரி தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பு என்பர்.

## நீடுபுகழ் உற்ற கூடுதுறை

காயத்திரி சந்நிதியிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள கூடுதுறையை அடையலாம். சங்கமேசுவரர் கோயிலின் தென்புற வாயிலின் வழியாகவும் கூடுதுறையை அடையலாம். கூடுதுறை என்பது காவிரியுடன் பவானியாறு கலக்குமிடம். இது மிகவும் அழகான இயற்கைக் காட்சிகள் நிரம்பிய இடம். இங்கு நீராட வசதியாக நீண்ட நல்ல படித்துறையைக் கட்டி வைத்துள்ளனர். அமாவாசை, கிரகணம், ஆடிப்பெருக்கு ஆகிய காலங்களில் இங்கு நீராடுவது மிகவும் சிறப்பு. இதனையே,

''காலில் அரவம் இருசுடரைப் பற்றும் காலத்திலே
மேலுலகம் பெறுவோர் புனல் மூழ்க விரும்புவது
கோலம் மிகுந்த பவானியும் பொன்னியும் கூடுதுறை
வாலிப காசி நண்ணாவூர் பயில்கொங்கு மண்டலமே''

என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

பார்வதி அம்மையின் திருப்பெயர்கள் பலவற்றுள் பவானி என்பதும் ஒன்று. அந்தப் பெயரே நதியின் பெயராகும். தலத்தின் பெயராகவும் அமைந்திருக்கின்றது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்தத் தலத்திற்கு வந்து இங்குள்ள முக்கூடலில் (கூடுதுறையில்) மூழ்கி எழுவோரை யாதொரு தீங்கும் நண்ணாது என்பது பெரியோர்களின் கருத்தாகும். இக்கூடுதுறையில் நீராடிய பின் அனைவரும் வணங்கத்தக்க வகையில் அரசுவேம்பு பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். அவரைச் சுற்றிலும் எண்ணற்ற நாகர் உருவங்கள் வைக்கப் பெற்றுள்ளன. பக்தர்கள் நீராடிய பின் இந்தப் பிள்ளையாரையும், நாகர்களையும் சேர்த்தே வலம் வந்து வணங்குகிறார்கள். இங்கே அபிஷேக மண்டபம் ஒன்றும் உண்டு. இம்மண்டபமும் மிகவும் பழமையானது ஆகும்.

## அமிர்தலிங்கேசுவரர்

அபிஷேக மண்டபத்தில் வடபால் உள்ளது அமிர்தலிங்கேசுவரர் ஆலயம். இங்கே அமுதமே லிங்கமாக மாறியிருக்கிறது. இந்த அமுதலிங்கம் அதற்குரிய ஆவுடையாரின் மேல் இருக்கிறது. எளிதில் எடுக்கவும், திரும்ப வைக்கவும் கூடிய நிலையில் இருக்கிறது. மகப்பேறு இல்லாதவர்கள் இந்த அமுத லிங்கத்தை எடுத்து இடையில் வைத்துக் கொண்டு அக்கோயிலை வலம் வந்தால் மகப்பேறு அடைவர் என்பது நம்பிக்கை! பராசர முனிவர் தான் பெற்ற அமுத குடத்தினை அசுரர்கள் அறியாவண்ணம் புதைத்து வைத்த இடத்தினின்றும் அதனைத் தோண்டி எடுத்த பின்னர் அவ்விடத்தை ஆழப்படுத்தியதில் அமுத தீர்த்தம் ஏற்பட்டது. அத்தீர்த்தனின்றும் ஓர் ஊற்று எழுந்து காவிரி, பவானி ஆகிய நதிகளில் கலந்தது. ஆகவே, 'முக்கூடல், ஆயிற்று. மூர்த்தியாலும், தலத்தாலும், தீர்த்தத்தாலும், சிறப்புப் பெற்றது இந்த நண்ணாவூர்.

### சகஸ்ரலிங்கேசுவரர்

அமிர்தலிங்கேசுவரர் கோயிலுக்குக் கீழ்பால் அமைந்திருப்பது சகஸ்ரலிங்கேசுவரர் ஆலயம் ஆகும். இவ்வாலயத்தில் உள்ள லிங்கம் 1008 லிங்க அமைப்பு உடையது. இவ்வாலயம் கிழக்கு நோக்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று அமிர்தலிங்கேசுவரர்க்கும், சகஸ்வரலிங்கேசுவரர்க்கும் சிறப்புப் பூசை நடைபெறுகின்றது. வேண்டுவோர்க்கு வேண்டியாங்கு வரம் அளிப்பவர் இந்த சகஸ்ரலிங்கேசுவரர். இவருக்கு நேர் கிழக்கில் இருப்பதுதான் காயத்திரி லிங்கேசுவரர் கோயில்.

### கோட்டை மதில்

இவ்விரு ஆலயங்களைத் தாண்டி வடபால் சென்றால் அங்கு காணப்படுவது கோயிலின் தென்புற மதில் சுவராகும். இது ஒரு கோட்டைச் சுவராகும். இக்கோயிலைச் சுற்றி ஒரு கோட்டை இருந்திருக்கின்றது. அந்த நாளில், அந்தக் கோட்டைச் சுவரின் சின்னங்கள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன. எனினும் கோட்டையின் பெரும்பகுதி இடிந்து தகர்ந்து விட்டது. அப்படியும் கூட தென்புற மதிலில் கோட்டைச் சுவரைத் தாங்கும் துணைச் சுவர்கள் சாய்வாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

### தனிப்பெருமை கொண்ட தல விருட்சம்

இம்மதில் சுவரில் உள்ள தென்புற வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் தென்மேற்கு மூலையில் ஒரு மேடையின்மீது தலவிருட்சமான இலந்தை மரம் உள்ளது. இங்குத் தல விருட்சம் இலந்தை மரம். இலந்தைக்கு வடமொழியில் 'பதரி' என்று பெயர். எனவே தல விருட்சத்தின் பெயரையொட்டி இத்தலத்திற்கு 'பதரிகாச்சிரமம்' என்று பெயர் ஏற்பட்டது. வேதமே இங்கு இலந்தை மரமாக வந்ததாகப் புராணம் கூறும். இம்மரம் நாள்தோறும் இறைவனின் பூஜைக்கு மிக்க சுவையுடைய ஒவ்வொரு பழத்தைத் தருமாம். இதனைக் கொங்கு மண்டல சதக ஆசிரியர் ஒரு பாடல் மூலம் விளக்குகின்றார்.

''அருந்தவ மாமுனி வோர்களும் தேவரும் அன்புடனே
நிரந்தர மாகத் தொழும்ஆ லயத்திற்கு நித்தம்நித்தம்
திருந்தும் பரமசிவபூ சைனைக்கொரு தென்னிலந்தை
மரங்கனி யீவதும் நண்ணாவூர் சூழ்கொங்கு
மண்டலமே!

என்பது அப்பாடல் மேலும், இறைவனை வேண்டி இம்மரத்தின் கனியை உண்டோர் மகப்பேறு அடைவர் என தலபுராணம் கூறும்.

### சங்கமேசுவரர் கோயில்

மேற்கூறிய தல விருட்சம் அமைந்துள்ள பிரகாரத்திலிருந்து சங்கமேசுவரர் கோவிலுக்குள் செல்ல நான்கு வழிகள் உள்ளன. தென்புறத்தில் ஒன்று, அதாவது கூடுதுறைக்கு நேர் எதிரில் அமைந்துள்ளது. கூடுதுறையில் நீராடி வருவார் இதன்வழி நேராக உள்ளே செல்லலாம். வடபுறத்தில் இரண்டு வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று வேதநாயகி அம்மன். முருகர் கோவில் வழியாக நேரே சனீஸ்வர பகவானுக்கு அருகில் வந்து சேரும் வழியாகும். மற்றொன்று கீழ்ப்புறம் அமைந்துள்ளது. இந்த வாயிலின் இருபுறமும் வலம்புரி விநாயகர், குமாரமூர்த்தி ஆகியோர் திவ்ய தரிசனம் தருகின்றனர். இதன்வழியாக உட்சென்றால் நவக்கிரகம் அமைந்துள்ள முன்மண்டபத்தை அடையலாம். நான்காவது வாயில் கிழ்த்திசையில் உள்ளது. இவ்வாயிலின் முன் பலிபீடம், கொடிமரம், தீபஸ்தம்பம் ஆகியவை உள்ளன. இத்தீபஸ்தம்பத்தில் பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் ஒன்றாக அமைந்த 'தத்தாத்ரேயன்' கையில் கமண்டலமும், பிரம்பும் ஏந்திய நிலையில் காட்சி தருகின்றார். அவர் ஒரு அவதூதர். இவர் மும்மூர்த்திகளின் அம்சமாகவே அவதரித்தார் என்று சொல்லப்படுகிறது. இவர் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த கருத்துக்களைத் தத்துவங்களாக அருளியுள்ளார். அவரது திருவுருவம் இங்குள்ளது சிறப்பானது. இது மிகவும் சிறப்பு வாய்ந்த அற்புதச் சிற்பமாகும். இவருக்குத் தினந்தோறும் பூஜை உண்டு.

இவ்வாயிலின் வழியாக நாம் உள்ளே சென்றால் சங்கமேசுவரர் ஆலயத்தின் திருநடை மாளிகையுடன் கூடிய முன் மண்டபத்தை அடையலாம். இம் மண்டபத்தின் வாயிலின் இருபுறமும் சந்திர, சூரியர்கள் காட்சியளிக்கின்றனர். இம்மண்டபத்தின் தென்பகுதியில் தேவாரம் பாடிய நாயன்மார்கள் உள்ளனர். திருநடை மாளிகையின் தென்பகுதியில் அறுபத்துமூன்று நாயன்மார்கள், வீரபத்திரர், இராமநாதேஸ்வரர், பர்வதவர்த்தினி, பாலதண்டபாணி ஆகியோர் காட்சியளிக்கின்றனர். இதனையடுத்து மேல்திசையில் சித்தி விநாயகர் சந்நிதியும், பஞ்சலிங்கங்களும் (பிருதிவி, அப்பு, ஜோதி, வாயு, ஆகாசம்) கல்யாண சுப்பிரமணியர் சந்நிதியும், சனீஸ்வர பகவான் சந்நிதியும் உள்ளன. இங்குள்ள சனீஸ்வர பகவான் மிகவும் சக்தி வாய்ந்தவர். ஏனெனில் இது தகப்பனார் பூஜித்த இடம். அதாவது பாஸ்கர க்ஷேத்திரம். சூரிய பகவான் இங்கு வந்து இறைவனை வணங்கி அருள் பெற்ற இடம் ஆகையால் பாஸ்கர சேத்திரம் எனப்பட்டது. சூரிய பகவானின் பிள்ளை சனீஸ்வர பகவான். ஆகையால் இந்த சனீஸ்வரர் விசேட சக்தி வாய்ந்தவர். சனீஸ்வர பகவான் இங்குக் கிழக்கு முகம் பார்த்து இருப்பது சிறப்பு அம்சமாகும்.

இப்போதும்கூட ஆண்டுதோறும் சூரிய பகவானின் ஒளி மாசி மகம், ரத சப்தமிக்கு மூன்றாவது நாள் சங்கமேசுவரர், சுப்பிரமணியர், வேதநாயகியம்மன் சந்நிதிகளில் காலை நேரத்தில் பூஜை செய்வதுபோல் மூர்த்திகளின் மீது பட்டுச் சிறிது நேரத்தில் மறைந்து விடுகிறது. இந்தப் பாஸ்கர க்ஷேத்திரம் தீர்த்தம், நவக் கிரகம் போன்றவைகளின் விசேடத் தன்மை பெறுவத னால் இத்தலத்தில் வணங்குவோர், இராமேசுவரம் சென்று வணங்கிய பலன் பெறுவர்.

இந்தத் திருநடை மாளிகையின் வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்கள் இடம் பெற்றுள்ளன. ஏராள மான பக்தர்கள் இங்கு வந்து அர்ச்சனை செய்கிறார்கள். இங்கு அர்ச்சனை செய்தால் அவர்களது குறைகள் நீங்குகின்றன என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. திருநடை மாளிகையின் கீழ்ப்பகுதி ஒரு பெரிய மண்டப மாக அமைந்துள்ளது. இம்மண்டபத் தூண்களில் உள்ள சுவாமி ஐயப்பன் சிற்பமும், விவேகாநந்தர் சிற்பமும் குறிப்பிடத்தக்கன.

இத்திருநடை மாளிகையினின்றும் சங்கமேசு வரர் கோயில் மகாமண்டபம் செல்லக் கிழக்குப்புறம் ஒன்றும், தெற்குப்புறம் ஒன்றும் ஆக இரண்டு வாயில்கள் உள்ளன. இங்குள்ள கருவறையின் தென் பக்கத்தில் தட்சிணாமூர்த்திக்கு ஒரு சிறிய அழகிய சந்நிதி உண்டு. இங்கு இறைவன் கல் ஆலின் கீழ் அமர்ந்து உபதேசிக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இச்சந்நிதி யில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தின் சிற்ப அமைப் பும், அதன் உயரத்தில் செதுக்கப்பட்டுள்ள தாமரை மலர்கள், கல்சங்கிலிகள் மிகவும் அற்புதமான வேலைப் பாடுகள் அமைந்தவை. அவசியம் கண்டுகளிக்கத் தக்கவை.


கருவறையின் மேல்புறம் தேவகோட்டத்தில் அமைந்திருப்பது லிங்கோற்பவம். இதனைத் தமிழில் 'அண்ணாமலையார்' என்பர். சிவபெருமானது அடியை யும் முடியையும் காண பிரும்மாவும், விஷ்ணுவும் போட்டி போடுகின்றனர். சிவபெருமான் லிங்க வடிவின ராகவும், பிரும்மா அன்னப் பறவையின் மீதேறி உயரே பறப்பது போலவும், விஷ்ணு வராக அவதாரம் எடுத்து அடியில் தோண்டிச் செல்வது போலவும் செதுக்கப் பெற்றிருக்கிறது. கருவறையின் வடபுறத்தில் உள்ள தேவ கோட்டம் ஒன்றில் பிரும்மா காட்சியளிக்கிறார். மற்றொரு கோட்டத்தில் ஸ்ரீ விஷ்ணு துர்க்கையும், அவருக்கு எதிரில் அவரது கமலபாதங்கள் பொருந்திய மேடையும் காணப்படுகின்றன. இந்தத் துர்க்காதேவிக்கு நெய் விளக்கு எரியவிட்டு அர்ச்சனை செய்து வழி பட்டால் தீராத வினை நீங்கும்; திருமணம் ஆகாதவர் களுக்குத் திருமணமாகும். இவ்விரு கோட்டங்களுக் கிடையில் சண்டிகேசுவரருக்கு ஒரு தனிச் சந்நிதி உண்டு. இங்குப் பக்தர்கள் தங்களது துணியிலிருந்து ஒரு நூலினை எடுத்துப் போட்டு, கைதட்டி, சண்டிகேசு வரனை வணங்குகிறார்கள்.

திருநடை மாளிகையை வலம் வந்து முன் மண்டபத்தில் உள்ள நந்திகேசுவரரை வணங்கி உள்ளே மகா மண்டபம் செல்லலாம். இங்குள்ள தூணில் தேவாரம் பாடுவது போல் செதுக்கப்பட்டுள்ள திரு ஞான சம்பந்தரின் பால் வடியும் முகம் கண்டு நினைந்து நினைந்து மகிழத்தக்கது. இம்மண்டபத்தின் வடபால் நடராசரின் திருமேனியும் பிற உற்சவ விக்கிரகங்களும் வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நடராசரின் கொவ் வைச் செவ்வாயும், குமிழ் சிரிப்பும், தூக்கி நின்றாடும் திருவடியும் கண்டு மகிழ்ந்து வணங்கத்தக்கன. ஓங்கார மாய், உட்பொருளாய் நிற்பவன் இவ்விறைவன். இங்கே ஆடும் பெருமானும், அம்பிகைப் பெண்மானும் ஒரு சேரக்காட்சியளிக்கின்றனர்.

மகா மண்டபத்திலிருந்து நோக்கினால் அர்த்த மண்டபமும், அதன்பின் உள்ள கருவறை எனப்படும் கர்ப்ப கிருகமும் தெரியும். இங்குதான் சங்கமேசுவரர் அருள்நிறை காட்சி தருகிறார். இங்கு சங்கமேசுவரர் இலிங்க வடிவமாக உள்ளார். இந்தத் திருநணா உடைய பெருமானை வழிபடும் மக்கள் விரதங்களா லும் அவற்றால் விளைந்த ஞானத்தாலும் உயர்ந்த நன்மக்கள் காணப்படுகின்றனர்.

இங்குள்ள சிவபெருமான் வேதநாயகி எனும் பெருமாட்டியைத் தன் இடப் பாகத்தில் வைத்திருக் கிறான். அமுதனைய பெருமாட்டி அவன் பாகத்து அமர்ந்திருப்பதனால் அவனுக்கு எதனாலும் துன்பம் இல்லை. அமுதமயமாக இருக்கின்றவன். ஆகையால் எத்தகைய நஞ்சானாலும் அவனை ஒன்றும் செய்யாது. பாம்பை அவன் தன் திருமேனியில் புரள விட்டிருக் கிறான். இதுவே அவருக்கு அணியாக அமைந்துள்ளது. தேவாரப் பாடல்களாலும், பிற இன்னிசைப்பாடல் களாலும் ஓதுவாரும், பிறபக்தர்களும் இப்பெருமானின் புகழைப்பாடிப் பக்தி வெள்ளம் பெருகச்செய்கின்றனர்.

இயற்கைச் சூழலில் பசுமையான பூஞ்சோலை களுக்கிடையில் அமைந்துள்ள இக்கோவிலில் மந்திகள் கூத்தாடுகின்றன. வண்டுகள் பாடுகின்றன. அவை தமக்கு ஒரு பயன் உண்டென்று எதிர்பார்க்காமல் அவற்றைச் செய்தாலும், தேமாங்கனியும் செந்தேனும் அவைகளுக்குக் கிடைக்கின்றன. அவ்வாறிருக்க, இங்கே எழுந்தருளியுள்ள இறைவனுடைய திருக்காட்சியைக் கண்டு வழிபடும் மக்கள் அதனுடைய பலன்களாகிய



திருச்சி மாவட்டம் திருவானக்காவல் அருள்மிகு சம்புகேசுவரர் – அகிலாண்டேசுவரி திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ விழாவில் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறைச் செயலாளர் உயர்திரு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருச்சி உதவி ஆணையர் திரு ம. தேவேந்திரன், பி.எஸ்.ஸி, பி.எல். மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் திரு ந. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல். ஆகியோர் உடன் உள்ளார்கள்.

இனிய போகங்களையும் இறைவனுடைய திருவருளையும் ஒருங்கே பெறுவார்கள்.

## சிறப்புகள்

பண்டைக்கால முறைப்படி இத்தலத்தில் சைவ, வைணவ சமரச ஞான உணர்விற்கு அடிப்படையாக, இங்கு அருள்மிகு சங்கமேஸ்வரர் சந்நிதியுடன், ஆதி கேசவப் பெருமாள் சந்நிதியும் அற்புதச் சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளது. மக்களின் நோய்களைத் தீர்ப்பதில் இங்குள்ள சுரஹரேஸ்வரர் மிக்க அருளாற்றல் வாய்ந்து விளங்குவதாக மக்கள் பெரிதும் நம்புகின்றனர். அதேபோன்று மகப்பேறு அற்றோர் அமுதலிங்கத்தை வணங்கியும், தலவிருட்சமான இலந்தை மரத்தின் கனியை உண்டும் மகப்பேறு பெற்றனர் என்றும் கூறுகின்றனர்.

## தீர்த்தப் பெருமை

காவிரி, பவானி, அமுதநதி ஆகிய முக்கூடல் தீர்த்தமேயன்றி, சூரிய தீர்த்தம், சக்கர தீர்த்தம், தேவ தீர்த்தம் ஆகியவை சிறந்தவை.

## நீராடும் காலம்

கூடுதுறையில் எக்காலத்தும் மூழ்கிப் பெரும் பேறு பெறலாம், எனினும் அமாவாசை நாட்களிலும், ஆடிப்பதினெட்டாம் நாளிலும், இங்கு பெரும் கூட்டம் கூடுகின்றது. ஆடிப் பதினெட்டாம் நாளில் இக்கூடு துறையில் சுமங்கலிப் பெண்கள் காவிரி அம்மனுக்கு தேங்காய் பழம், பூ, காதோலை, கருமணி ஆகிய வற்றுடன் பூசை செய்து வணங்குவது கண்கொள்ளாக் காட்சி. இங்கு மூழ்கி நீராட மிகவும் பகழ்பெற்ற காலம் சூரிய, சந்திர கிரகண நாட்கள்தாம் என்று கொங்கு மண்டல சதக ஆசிரியர் கூறுகின்றனர். அன்றைக்குக் கூடுதுறையில் மூழ்குபவர்கள் வீடுபேறு அடைவர்.

★★★

# காரைக்கால் அம்மையார் சிறப்புகள்

**- டி.எஸ். பாலு,** எம்.ஏ., பி.எட்.

சைவ அடியார்களில் இலக்கியம் படைத்த ஒரே பெண் காரைக்கால் அம்மையார் அவர்களே ஆவார். இவர் இயற்றிய பனுவல்கள் பதினொன்றாம் திருமுறையில் உள்ளன.

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்
2. திருவிரட்டை மணிமாலை
3. அற்புதத் திருவந்தாதி ஆகியவை அப்பனுவல்கள்.

பாடல்களின் மொத்த எண்ணிக்கை 143. ஆசிரியர் விருத்தம் - 22; கட்டளைக் கலித்துறை - 10; வெண்பா - 111.

கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பு முதன் முதல் காரைக்கால் அம்மையாரின் ''திருவிரட்டை மணிமாலை''யில்தான் பயின்று வரப் பார்க்கின்றோம். அடுத்து இவ்வகை யாப்பைத் திருநாவுக்கரசரின் பதிகங்களில் காணலாம். அவர் காலத்தில் கூட இந்த யாப்பைத் 'திருவிருத்தம்' என்றே அழைத்தனர்.

வெண்பாவால் முதன்முதல் 'அந்தாதி' இலக்கியம் பாடிய பெருமையும் அம்மையாருக்கே உண்டு. அற்புதத் திருவந்தாதியில் உள்ள அனைத்து வெண்பாவும் இருவிகற்ப நேரிசை வெண்பாவாகும்.

புனிதவதியார், காரைக்கால் அம்மையார், காரைக்கால் பேய் ஆகிய பெயர்களால் இவர் அழைக்கப் படுகிறார்.

சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் 66 பாடல்களில் இவர் வரலாற்றைக் கூறுகிறார்.

முதன்முதல் சுந்தரர் இவரைப் ''பேயார்க்கும் அடியேன்'' என்றார்.

இவர் வாழ்ந்த காலம் கி.பி. 4 அல்லது 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் ஒரு காலம் என்பர் அறிஞர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், இவ்வம்மையார் தலையால் நடந்து சென்று வழிபட்ட திருவாலங்காட்டில், தாம் கால் வைத்து நடப்பதற்கு அஞ்சி அருகிலிருந்த ஒரு பதியில் தங்கியிருந்தார் என்று சேக்கிழார் கூறுகிறார். எனவே திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது விளங்கும்.

காரைக்கால் அம்மையார் பாடல்களில் வழக்குச் சொற்களோ இழிசொற்களோ இல்லை. அடியார்கள் பற்றிய குறிப்புகளும் இல்லை.

இயற்றமிழ், இசைத்தமிழ் ஆகிய இரண்டிலும் வல்லமை பெற்றவர் அம்மையார். ''இயற்றமிழ்ப் பயிற்சியோடு இசையிலும் சிறந்த பயிற்சி உண்டென்பது மூத்த திருப்பதிகங்கள் பண்ணுடன் அமைந்தமையும் திருவாலங்காட்டில் இறைவன் திருநடம் புரியுங்கால் இசைபாடி மகிழ்ந்தார் என்பதும் சான்றாம்.'' என்பது பண்டிதமணி மு. கதிரேசனாரின் விளக்கம்.

''உள்ளாளம்'' என்னும் ஒருவகைப் பாட்டுவிகற்பத்தை அம்மையார் கூறுகிறார். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திற்குப் பண் 'நட்டபாடை' எனவும், இரண்டாவது பதிகத்திற்குப் பண் 'இந்தளம்' என்றும் குறிக்கப் பட்டுள்ளன.

துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, குரல் என்ற ஏழிசைகளின் பெயரையும் அம்மையார் குறிப்பிடுகின்றார். 'குரல்' என்பதை அவர் 'ஓசை' என்று கூறுகிறார். (மூத்த திருப்பதிகம். பா.1)

கரடிகை, கொக்கரை, சச்சரி, தக்கை, தகுணிதம், தாளம், துந்துபி, தமருகம், குடமுழா, மொந்தை, மத்தளம், வன்கை, மென்றோல் ஆகிய பதின்மூன்று வகை தோல் கருவிகளைப் பற்றிக் கூறுகிறார் அம்மையார். வீணை, யாழ் பற்றிய குறிப்புகளும் மூத்த திருப்பதிகத்தில் உண்டு.

சிவபெருமானைப் போற்றுமிடத்து 'நட்டம் பேணும் இறைவன்' எனக் கூறுவதால் நடனம் பற்றிய குறிப்பும், மூத்த திருப்பதிகத்தின் ஏழாவது பாடலில் துணங்கைக் கூத்தைப் பற்றிய குறிப்பையும் காணலாம். இவற்றால் அம்மையாரின் கலையுள்ளம் எத்தகையது என்பது புலப்படும்.

இறைவன் தன் சடையில் வன்னி மலரைச் சூடுபவன், மார்பில் பன்றிக் கொம்பை அணிபவன் என்னும் புதிய செய்திகளை அம்மையாரின் நூல்களின் மூலம் அறிகின்றோம்.

ஈசன் இல்லாத பொருள் எதுவுமில்லை, உலகை ஆட்டுவிப்பது இறை அருளே. இறைவன் அருள் வாய்ந்தால் வினை உண்டாக்கும் பிறவிக்கடலை நீந்தலாம் போன்ற பல தத்துவக் கருத்துக்களை அவர் பாடல்களில் காணலாம்.

''அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்''

- அற்புதத் திருவந்தாதியிலுள்ள இப்பாடல் இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பதைக் காட்டும்.

★★★

# திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை வரலாறு

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

பண்பட்ட வாழ்வியலில் இளமையைவிட முதுமையில் கனிவு இருக்கும். பழுப்பது வேறு. வெம்புவது வேறு. இன்றைக்கு உலகத்தில் பழுத்தவர் குறைவு. வெம்பியவர் அதிகம். சிலர் முதுமையில் அழகாயில்லை என்றால் நன்றாகப் பழுக்கவில்லை; வெம்பல் என்றே சொல்லலாம்.

சிவனே இவரது வாழ்க்கையின் திறத்தை உலகுக்கு உணர்த்தவே, புதுவிதமாக ஒரு நாடகம் நிகழ்த்த எண்ணினார். தாமும் மனைவியும் தீண்டுவ தில்லை என்பது யாவர்க்கும் தெரியக்கூடாது என எண்ணியே வாழ்ந்ததை உலகுக்கு அறிவிக்கவே, வயோதிக சிவயோகி போல் வந்து, தம்மிடமிருந்த ''திருவோட்டைப் பத்திரமாக வைத்திரு. திரும்பி வந்து கேட்டதும் கொடு'' எனச் சொல்லிவிட்டு மறைந்தார். பின்பு அவ்வோட்டை அவரிடம் இருந்து மறைக்கவும் செய்தார்.

பொதுவாக மனைவியின் சிறுமையைப் பறை சாற்றி மகிழும் ஆண்களும், கணவனின் கொடுமை யைத் தூற்றி இகழும் பெண்டிர்களும், திருநீலகண்ட நாயனார் தம்பதிகள் தங்களுக்குள் ஏற்பட்ட மனத் தாபம் அயலார்க்குத் தெரியாது இரகசியமாக காத்த பெருமையை ஒரு பாடமாக உணர்ந்து வாழ்க்கை நடத்துவதே சிறப்பு. திருநீலகண்டருக்கு உடலுறவு கொள்ள அழகே வடிவான மனைவியிருந்தும் கூட, பரத்தையர்பால் மனம் நாடினார். இதனையே கருவூல மாகக்காட்டி இவரது பக்தியின் பெருமையை உலகவர் அறியவே, இறைவனே ஆடிய நாடகமா? தில்லையில் ஆடியது போதாது என்று, இவ ரிடமும் ஆடிய நாடகமா? எது எவ்வாறாயினும், அதனுடைய விளைவேதான் தன் வாழ் நாள் முழுவதும் பெண்ணலமுறாது வாழ வேண்டி ஏற்பட்டது. இருப்பினும் நீலகண்டர், சிற் றின்பத்தைவிட பல மடங்கு எம்பெருமான் மீது அன்பு செலுத்தியதால், சிற்றின்பத்தை எளிதில் வெல்ல முடிந்தது. திருநீலகண்டர் மனைவி, கணவனையே குருவாகவும், தெய்வமாகவும் பாவித்து, காலை எழுந்த தும், கணவனைத் தொழுது எழுவாள் என்கிற தமிழ் மறைக்குப் பொருந்தும் வகையில் வாழ்ந்து வரலானார்.

இன்று அப்படி மனைவிமார்கள் கணவனை வணங்குகிறார்களா என்று யாரும் என்னைக் கேட்க வேண்டாம். வணங்கத் தக்க நிலையில் கணவன் இருக் கிறானா என்று கேட்டுப்பார்த்தால் சரியான விடை கிடைக்கும். 'கோபப்புண் என்றால் காலம் அருமருந் தாகும்' எனக் காத்திருந்து, இளமையில் அனுபவிக்கும் சுகத்தைத் துய்க்காது காத்திருந்தார். ஒரு நாள், முறுக் கேறிய காளைப்பருவம் ஆனதால், நீலகண்டர் சிற்றின்ப வேட்கை எனும் உணர்ச்சிப்புயலில் சிக்குண்டு, ''ஊடல் தீர்த்தாள்'' என்ற வார்த்தையால் சேக்கிழார் கூறுகிறார். திருநீலகண்டரிடம் இன்ப உணர்வு வயப்படும் உந்துதலே குறையாக இருந்தது. இவ்வியாதியை மனைவியைத் தவிர வேறு யாரால் தீர்க்க இயலும்? அதனால் தான் நீலகண்டரை மாற்றுக் குறையாத மனம் கொண்டவராக்க, சிவனார், அருந்ததிக் கற்பினுக்குமேலான அழகு பொருந்திய மனைவியைக் கருவூலமாக ஆக்கினார். திருநீலகண்டர், மனைவியின் கற்பே காரணமாக இறைமோட்சம் கிட்டியது என்றால் மிகையாகாது.

இல்லற வாழ்வில் மனைவியரின் ஒத்துழைப்பு இருந்தால்தான், இகவாழ்விலும், பரவாழ்விலும் மேன்மையடைய முடியும் எனும் மனையாளது மாட்சியை, திருநீலகண்டர் வரலாறு வருகிற தலை முறைக்கு ஒரு பாடமாகச் சொல்லிச் செல்கிறது என்பது, பகுத்தறிவுக்கு மாறுபட்ட விளக்கமாக இருக்குமா என்ன? மனைவியும் கணவனை நோக்கி, ''எம்மைத் தீண்டுவராயின் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டது சிற்றின்ப வெறியில் இருக்கும் ஒரு ஆணையே அடக்கும் ஆணையாக இருந்தது என்றால் மிகையாகாது. இவரது காமவேட்கை எனும் காட்டை, இறை வன் திருநாமமாகிய சிறு பொறியே எரித்து விட்டதில் ஆச்சரியமில்லை. ''எம்மைத் தீண்டுவராயின் திரு நீலகண்டம்'' என்ற சொல்லே அக்னிப் பொறியாக அமைந்து விட்டது. பல ஜன்மத்துப் பாவமூட்டை 'பகீர்' எனப்பற்றி எரிய, நாய்போல் வாழ்ந்தவரை நாயனா ராக உயர்த்திவிட்டது.

''ஆணை கேட்ட பெரியவர் பெயர்த்து நீங்கி'' என்ற சேக்கிழார் வார்த்தைகளே இதற்குச் சான்று. மற்றோர் காரணம், பொருளுக்காக பல ஆண்களை வெட்கமின்றித் தீண்டுவது விலை மகளின் மானமற்ற செயல். அத்தகையோரைத் தீண்டிய கணவனைத் தீண்டுவதும் ஒரு வகையில் மானமற்ற செயல் என்பது அடியேனின் கருத்து. ''வேண்டுவது இரந்து கூறி'' - என

சேக்கிழார் கூறியதின் ஒரு பொருள் - தனக்கு அவள் தேவை. அவளுக்கு மன்னிக்கின்ற மனம் வேண்டும். அடுத்த பொருள் - இருவரும் வாழ்ந்தாக வேண்டும். என்கிற சமூக நிர்ப்பந்தம். 3 - வது கருத்து ''எம்மைத் தீண்டுவராயின் திருநீலகண்டம்'' என ஆணை பிறப்பிப்பதில் உள்ளடங்கியுள்ளதைக் கவனிப்போம். பொதுவாக எந்தப் பெண்ணும் கணவனிடம் மரியாதையோடு பன்மையில் நாம், யாம் எனப் பேசுவதில்லை. அரசர்கள், மடாதிபதிகள் பேசலாம். ஆனால் மனைவி பேசுவதில்லை. அப்படியிருக்க தெய்வச் சேக்கிழார் 'எம்மை' என்றது ஏன்?

வாய் அசைத்தவள் திருநீலகண்டரின் மனைவி. ஆனால் உள்ளிருந்து உந்திப் பேசியவர் இறைவன். என்வே நாயனார் வாழ்வை மாற்றியமைக்க இறைவன் கருணை இப்படி பேசியது எனக் கருதலாம். இதைவிட அழகான நயம் ஒன்று உண்டு. 'என்னைத் தீண்டாதே' என மனைவி நினைத்த மாதிரியே, தன்னைத் தீண்டக் கூடாது என்று இறைவனும் நினைத்திருக்கலாம் அல்லவா! எங்களைத் தீண்ட வேண்டாம் எனப் பன்மையில் மனைவியுடன் கூட்டு சேர்ந்து ''எம்மைத் தீண்டாதே'' என இருவரும் சேர்ந்து மொழிந்திருக்கலாம் அல்லவா! கடவுள் எப்போதும் நலிந்தவர் பக்கம் பேசுகிறவர் அல்லவா! 'என்னை' என்று ஒருமையில் சொல்லி இருந்தால் மனைவியை ஒதுக்கிவிட்டு வேறு பெண்களை மணந்து தீண்டி இருக்கக்கூடும். திருநீலகண்டர் மனைவி 'எம்மை', எனப் பன்மையில் சொன்னதும் எந்தப் பெண்ணையும் இனி தீண்டலாகாது எனப் பெண் குலத்தை விட்டே விலகினார்.

'திருநீலகண்டம்' எனும் நாமம், காலம் காலமாக திருநீலகண்டர் மனதில் கிடந்த காம வேட்கையை, 'ஒரு திருநாமம்' எரித்து விட்டது. பல பிறவிகளில் படிந்துள்ள அழுக்காகிய - பாவமூட்டையை 'திருநாமம்' எனும் அக்கினிப்பொறி எரித்துவிட்டது. எந்தக் குரு இந்த மந்திரத்தை மனைவிக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்? கணவர் தாம் அந்தக் குரு. பண்டைக்காலம் தொட்டு, குருவிடம் சென்று மந்திர உபதேசம் பெறும் உரிமை ஆணுக்குத்தான் வழங்கியது; பெண்ணுக்கு நமது சமுதாயம் அந்த உரிமையை வழங்கவில்லை. எனவே, பெண்களுக்கு மாதா பிதா என்ற உறவுக்குப் பிறகு குரு, தெய்வம் என்ற ஸ்தானத்தில் கணவன்தான் நிறுத்தப்படுகிறான், அதனால்தான் மனைவியானவள், காலையில் எழுந்ததும், கணவனையே குருவாக தொழுது எழுவது பண்டைய நடைமுறையில் வந்துள்ளது.


கணவனே குருவாக விளங்கியதால், திருநீலகண்டரின் மனைவி ''நீலகண்டம்'' எனும் மந்திரத்தை நாயனார் மூலமே பெற்றிருக்க வேண்டும். அதனால் அந்த மந்திரம் உச்சரித்ததும் நாயனார் அதிர்வுற்று விலகுகிறார். பொதுவாகவே, பழகிய சொல்லே ஆபத்துக் காலத்தில் வாயிலிருந்து தானாகவே வெளிவரும். எனவே மனைவியாருக்கு, 'திருநீலகண்டம்' என்பது வழக்கமான சொல்லாதலால், நாயனாரைக் கட்டி விட்டது. அதனால் நாயனாரின் மனைவி குருவை விஞ்சிய சீடர். மந்திரம் எடுத்துக் கொடுத்த குருவை விட பல மடங்கு ஜபம் செய்த காரணத்தால் சீடருக்கு நாயனாரை விட வலிமை கூடிவிட்டது.

பொன்னைவிட உயர்ந்த மண் ஓடு, உலகத்தில் இருக்கிறது. நம் உடம்பு என்கிற மண் ஓடு, பொன்னை விட மேலானது. இவ்வுடம்பு, போனால் அப்போதே வேறு உடம்பு கிடைக்குமா? கிடைக்காது. எனவே காப்பாற்றப்பட வேண்டியது இவ்வுடம்பு. 'சரீரம்தான் அந்த மண் ஓடு' என்பதை அழுத்தமாக விளக்கவேண்டுமானால், ஒரு முறை சுடுகாட்டுக்குப் போய் வந்தால் புரியும். மற்றுமோர் விளக்கம், பிரம்மாவே குயவர். அவர் செய்த சட்டியே சரீரம் என்று பழம்பாடல்கள் கூறுகின்றன.

''நந்த வனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடி கூத்தாடி போட்(டு) உடைத்தாண்டி''

இதில் கடைசியில் வரும் வார்த்தை 'போட்டு உடைத்தாண்டி' என்றது - 'மரணம் அடைகிறோம்' என்பதைக் குறிக்கிறது. உள் வைத்தவற்றை தூய்மை செய்வது என திருவோட்டைச் சேக்கிழார் புகழ்கிறார். பல ஜன்மத்துப் பாவங்கள் விடுபட, ஜபதபம் என்கிற முயற்சிகளில் ஆன்மா ஈடுபடுகிறது.

மண் ஓட்டை திருநீலகண்டரிடம் 'வைத்திரு' எனக் கொடுத்ததும், முனிவராக வந்த சிவனே அதனை மறைக்கவும் செய்தார். நீலகண்டரோ ''மறைந்த மண் ஓட்டுக்குப் பதிலாய் பொன்னால் செய்த மாற்றுவோடு தருகிறேன்'' என்ற போதிலும், சிவனடியார் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைய நாளில் இது மாதிரி ஒரு தர்மசங்கடத்தில் சராசரி ஒருவன் சிக்கிக்கொண்டால் என்ன சொல்லுவான், ''போய்யா போ! நீ ஓடு கொடுத்ததற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? ஏதாவது இதற்கு எழுதிக் கொடுத்த ரசீது இருக்கிறதா? கொண்டுவா'' என்று சத்தியத்தைவிட சாமர்த்தியத்தை நம்பி யுத்தம் தொடங்கி இருப்பான். நாயனார் அப்படி செய்யாது, ஓடு தொலைந்துவிட்டது என்று ஒப்புக் கொண்டு அடியவர் என்ன கட்டளை இடுகிறாரோ அதன்படி தாம் நடந்து கொள்வதாக உறுதி அளிக்கிறார். இறைவனால் முன்பு கொடுக்கப்பட்டு பின்பு



மறைக்கப்பட்ட ஓட்டை நீலகண்டரிடம் அவர் கேட்ட போது இவர் திகைத்தார்.

சேக்கிழார் தாம் பாடிய பெரிய பராணத்தில் 'கொடுத்த ஓடு' எனக் கூறாது, 'வைத்த ஓடு' என்றே குறிப்பிடுகிறார். 'கொடுத்த' என்பதற்கும், 'வைத்த' என்பதற்கும் பெரிய வேறுபாடு இருக்குமோ? ''ஒருவரிடம் ரூ. 1000 கொடுத்து விட்டேன்'' என்பதற்கும், ''1000 ரூபாயை வைத்திரு'' எனத் தருவதற்கும் வித்தியாசம் உண்டு. தானே ஒரு பொருளை வைத்திரு என்றால், சிலகாலம் பாதுகாக்க மட்டுமே உரிமை உண்டு. உரியவர்க்கு, கேட்கும் போது அப்படியே தரவேண்டிய கடமையுண்டு. அப்போதும் பணம் கொடுத்தவர்கள்தான் உரியவராவர்; பெற்றவர் அல்லர் என்பது தெளிவு. இந்த உடம்பு நமக்கு கொடுக்கப் பட்டதா? அல்லது 'வைத்திரு' எனக் கடவுளாலேயே சொல்லப்பட்டதா? இதற்கு பதில் கண்டது 'பெரிய புராணம்.'

மண் ஓட்டுக்கு நிகரான இவ்வுடம்பு, இறைவனால் 'வைத்திரு' எனச் சொல்லப்பட்ட பொருள் 'அது நம்முடையது' என, சொந்தம் கொள்ள முடியாது. இரவல் போன்றது அல்லவா! திருப்பிக்கேட்டால் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் நாம். பாதுகாத்துவை என இறைவனால் கொடுக்கப்பட்ட உடம்பைப் பாழாக்கி வைக்க நமக்கு எந்த உரிமையும் இல்லை. நாம் இறைவனின் கடன்காரர்கள். திருநீலகண்டர், ஓட்டை தொலைத்துவிட்டார் என வெளிப்படையாக குற்றம் சாட்டப்பட்டாலும், இளமையில் உடம்பை வீணாக்கிக் கொண்டார் என்பதுதான் கடவுள் குற்றச்சாட்டு. கணவன், வாழ்வில் தவறு செய்தால், மனைவி வாழ்க்கையும் பாழாகிவிடுகிறது என்பதால், அடுத்தவர் வாழ்க்கையையும் பாழாக்கிவிட்டதாகவும் நாயனார் மீது கடவுள் குற்றம் சுமத்துகிறார். வாலிபப் பருவத்தில் உண்மையற்ற இன்பங்களில் தங்களை வீணாக்கி கொள்ளும் இளைஞர்கள் தங்கள் உடம்பை மட்டும் கெடுத்துக் கொள்ளாது, அவர்களுக்கு வாய்க்கும் மனைவியின் வாழ்வையும் பாழாக்கிவிடுகிறார்கள். இது சமூக அநீதி! எனவே நலிந்த மனைவியின் சார்பில், கடவுள், சண்டைக்கு வருகிறார், எப்படி ''உன்னுடைய அடைக்கலப்பொருள்ள பாழாக்கி விட்டாயே பாவி'' என்னும் கருத்தில்.

''ஆவதென் நின்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிப்பாவகம் செய்து பழிக்கு நீ ஒன்றும் நாணாய்'' என இறைவன் சார்பில் பாடலைப் பாடியுள்ளார் சேக்கிழார், பொன்னைவிட உயர்ந்த மண் ஓடு உலகத்தில் உண்டென்றால், நம் உடம்பு என்கிற மண் ஓடே! மண் ஓட்டுக்கு நிகரான இத்தேகம் போனால் அப்போதே வேறு உடம்பு கிடைக்குமா? கிடைக்காது? இளமை இன்பங்களை சரீரமூலம் துய்க்காமல் முதுமை வந்ததற்கு விளக்கம் கேட்டு மேலிடத்திலிருந்து அறிவிப்பு (நோட்டீஸ்) வருகிறது. ஆம். தொண்டரிடம் விளக்கம் காண எம்பெருமான் தவச்சீலராக வந்து விட்டார். எனவே போற்றப்பட வேண்டியது இவ்வுடம்பு. இதற்கு ஆழமான பொருள் கூறலாம்.

இடுகாட்டில் இறந்தவரை அவரது மகனிடம் நீர் நிரம்பிய மண் பானையைக் கொடுத்து சடலத்தைச் சுற்றி வரச் செய்வர். ஒவ்வொரு சுற்றிற்கும் கல்லினால் பானையை ஓட்டை போடுவார்கள். இப்படிச் செய்து, கடைசியில் காலிப் பானையைத் தூக்கிப் போட்டு (திரும்பி பார்க்காமல்) உடைத்துவிடுவார்கள். நீர் நிரம்பிய பானை எப்படி கொஞ்சம் கொஞ்சமாக உடை பட்டு இறுதியில் முற்றிலுமாக உடைந்துவிட்டதோ அப்படித்தான் இந்த உடம்பு கொஞ்சம் கொஞ்சமாக பயனற்றுப் போய், கடைசியில் முற்றிலும் பயனற்று விட்டது என்பது அச்சடங்கில் உள்ளடங்கிய கருத்து, இத்தகைய, அழியக்கூடிய மனித வாழ்க்கையை மண் பாண்டத்தின் வாயிலாக உணரச்செய்தது திருநீல கண்டரது மரபு, வாழையடி வாழையாக இக்கருத்தை உணர்த்தும் பொருட்டு இதனையே குலத்தொழிலாக செய்து வரும் 'வேட்கோவர்' எனும் குயவர்களை எவ்வாறு புகழ்வது என்றே தோன்றவில்லை.

கடைசியில் வாழ்க்கையில் தடுமாறி விழுந்த நாயனாரும் மனைவியும் ஒரு மூங்கில் கழியின் இரு முனைகளையும் பிடித்துக்கொண்டு உலகோர் அறிய இறைவனிடம் கூறி சத்தியத்திற்கு மாறாதபடி குளத்தில் மூழ்கப் போனார்கள். பண்டைக்கால மரபுப்படி கணவன் மனைவி சேர்ந்து ஒப்புக்கொள்வதே மரபு. இந்த இடத்தில் ஓர் உண்மை பொதிந்துள்ளது. ஏன் மூங்கிலின் கழியை பிடிக்காது, மேல் அணிந்திருக்கும் துண்டையோ, கயிற்றையோ பற்றிக் கொண்டு குளத்தில் மூழ்கி இருக்கலாமே? எதற்கு மூங்கில் மரத்தினால் ஆன கழியைப் பிடிக்க வேண்டும்.

'தீண்டுதல்' என்கிற தீட்டு (தொடு உணர்வு) மரத்திற்குக் கிடையாது. விஞ்ஞானரீதியாய் செம்பு, பித்தளை போன்றவைகள் மூலம் மின்சக்தி எளிதில் கடத்துவது போல் மரம் மின்சக்தியைக் கடத்தாது. இக் கருத்துக்கு மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் விதி விலக்கல்ல, சாத்திரப்படி மரக்குச்சி, மரக்கட்டைக்கு தீட்டு கிடையாது. அதனால் கையில் வைத்திருந்த வேணுக்கழியின் இருமுனைகளையும் இருவரும் பிடித்துக் கொண்டு இரும்புலீச்சுவரத்தில் உள்ள சுனைமலர் சோலை வாவி நண்ணி, மூழ்கப் போனார் கள். அப்போது சேக்கிழார் தமது பாடலில் ''மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி, மொய் யலர் வாவிபுக்கு மூழ்குவாய்'' எனக் கூறியதிலிருந்து, மனையவளை ஒரு சிறு பிழையும் புரியாதவள், கற்பு நெறி தவறாதவள் என உயர்த்திக் கூறி, கணவன் மேலேயே பழியைச் சுமத்துகிறார்.

அதன் பிறகு வேறு வழியின்றி திருநீலகண்டர் ''கூடாமை பாரோர் கேட்பப் பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதிலார்'' - அதாவது பலபேர் முன்னிலையில் தங்களது வாழ்க்கையில் நடந்தது நடந்தபடியே வருத்தத்தோடு சிவ நெறிதவறாதவர் உரைத்தார் எனச் சேக்கிழார், பெரிய புராணத்தில் கூறியுள்ளார். தவறுகளை உணர்ந்தால் போதாது. ஒப்புக் கொண்டால் தான் சரி. உணர்வதற்கு அறிவு போதும். ஒப்புக் கொள்வதற்கு துணிவு வேண்டும். அதனால் முனிவராய் வந்தவர், மூங்கில் தண்டின் இருமுனைகளை இருவரும் பற்றி நீரில் மூழ்க அனுமதி அளித்தார். குளத்தில் மூழ்கி எழுந்த வயது முதிர்ந்த தம்பதிகள் மீண்டும் இளம் தம்பதிகளாயக் காட்சி யளித்ததும், தேவர்கள் மலர்களைத் தூவி மகிழ்ந்தார் கள்.

வளமை யாமெனும் ஒட்டினை வாங்கியே
மிளிரு மஃது மறைந்திட மேவரும்
குளமதில் மூழ்கும் கொள்கையின் தொண்டரை
இளமை யாக்கிய ஈசனைப் போற்றுவோம்!

வியாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் சிதம்பரம் திருமூலட்டானேசுரரைப் பூசிக்க வந்தார். இத்தலத்தின் மேற்றிசையில் இவர் அமைதியான சூழலில் இருந்த ஒரு குளத்தைக் கண்டார். அதன் கரையில் பர்ணசாலை அமைத்து பூசித்து வந்தார். புலிக்கால் முனிவர் பூசித்த இந்தச் சிவலிங்க ஈசுவரர், திருப்புலிச்சுரர் என்னும் பெயர் பெற்றார். இவர் அமர்ந்த கோயில் திருப்புலிச் சுரம் என்னும் பெயர் பெற்றது.

திருநீலகண்ட நாயனாரையும் அவர் மனைவி யாரையும் இளமை பெறச் செய்த பின்னர் இக்கோயில் ''இளமையாக்கினார் கோயில்'' என்னும் சிறப்புப் பெயர் எய்தியது.

திருத்தொண்டத் தொகையில் திருநீலகண்டரைப் பற்றி கூறியவை:

''திரு நீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்''

திருத்தொண்டர் புராண சாரத்தில் திருநீலகண்ட நாயனா ரைப் பற்றிக் கூறியது;

''தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித்
தீண்டிலெமைத் திருநீல கண்டம்'' என்று
சொல்லுமனை யாள்தமையே யன்றி, மற்றும்
துடியிடையா ரிடை இன்பம் துறந்து மூத்தங்(கு)
எல்லையில் ஒரு இறைவைத்து மாற்றி 'நாங்கள்
எடுத்திலம்' என்று இயம்புமென மொழிந்து,
பொய்கை
மெல்லியலாளுடன் மூழ்கி இளமை யெய்தி
விளங்குபுலீச் சுரத்தரனை மேவினாரே''

அது மட்டுமா? இளமை நலம் துய்க்காத இரு வரும் துய்க்க வேண்டி, இறைவனே இவர்களை இளமையாக்கினார். நீலகண்டர் தம் துணைவியா ரோடு, பார்வதி பரமேஸ்வரனை விடைமேற்கண்டு ஆனந்தித்தனர். எம்பெருமானே மன்றினில் திருக்கூத்

தாடியதோடு அடியவர்கள் மனைதோறும் சென்று, அருள் புரிந்து, ''வென்ற ஐம்புலனால் மிக்கீர், விருப் புடன் இருக்க நம்பால் என்றும் இளமை நீங்கா'' என இறைவனே தம் திருவாயால் கூறியது மிகவும் போற்றத் தக்கது ஆகும்.

''விறனுடைத் தொண்டரும், அறவியற் கூந்த லாராம் மனைவியும் சிவலோகம் அதனை எய்தி பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே'' என்பதாக சேக்கிழார் கூறியுள்ளார்.

'வென்றஐம் புலனால் மிக்கீர்
விருப்புடன் இருக்க நம்பால்
'என்றுமிவ் விளமை நீங்கா(து)
என்றெழுந்தருளினாரே'

-திருநீலகண்டநாயனார் புராணம்

இளமை பெற்ற திருநீலகண்டரும் அவர் மனைவி யாரும் திருத்தொண்டு செய்து இறைவனடி எய்தினார்.

'திருத்தொண்டர் புராணம்' என்னும் 'பெரிய புராணத்தி'லுள்ள திருநீலகண்ட நாயனார் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் இவ்வரலாற்றை மிக அருமையாக 43 செய்யுள்களால் கூறியுள்ளார்.

இக்கட்டுரையை எழுதிமுடிக்கும் தருவாயில், அடியேனுக்கு அந்தமானிலிருந்து அழைப்பு வந்ததை யொட்டி செல்ல நேரிட்டது. அது சமயம் அந்தமானில் உள்ள போர்ட் பிளேரில் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். முதன்முதலாக அலைகடலை ஒட்டியே சென்ற போது, அங்கு அலைகடல் வாழ் ஐயனார் ஆலயத்தைத் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆலயத்தின் உட்பிரகாரத்தில் இடது பக்க மூலையில் அற்புதமான திருநீலகண்டர், அவரது மனைவியார் - இவரிருவரையும் கற்சிலை உருவத்தில் வடித்துள்ள சந்நிதியைக் கண்டேன்.

சென்னை எங்கே? அந்தமான் தீவு எங்கே? சென்னையிலிருந்து 1500 கி.மீட்டருக்கு அப்பால் கடல் கடந்து வந்த அடியேனுக்கு எதிர்பாராதவிதமாக, அவ் வாலயத்தில் அடியேனுக்கு காட்சிதந்து ஆட்கொண்ட பெருமையை விளக்க வார்த்தைகள் தெரியவில்லை. இவ்வற்புதத்தை நினைக்கும்தோறும் என் நாடி நரம் பெல்லாம் அன்னார்க்குக் கடமைப் பட்டதோடு, கண்களில் நீர்மல்க, தேவாரம் திருப்புகழ், பட்டினத் தடிகள் பாடல்கள் நினைவுக்கு வரவே அடியேன் பாடியது இன்றும் நினைக்கும்தோறும் என் உடம்பு புல்லரிக்கச் செய்கிறது. என்னுடன் வந்த புகைப்படக் காரரை, அச்சிலையினைப் படம் எடுக்கச் சொன்னேன். பிறகு ஆலயத்து முக்கிய பிரமுகஸ்தர்களைச் சந்தித்து பல செய்திகளை சேகரித்தேன். அந்தமானில் குறைந்தது 2000 வேளாளர்கள் (குயவர்கள்) வசிப்பதாகவும், எல்லோரும் வியாபாரத் துறையில் சிறப்புற்று வாழ்வ தாகவும் அறிந்துகொண்டேன். மேலும் இவர்கள் ஏன் திருநீலகண்டருக்குக் கோயில் அமைக்க எண்ணினர் எனக் கேட்டதற்கு, திருத்தொண்டத்தொகையில் சுந்தர ரால் முதன்முதலில் அன்னாரைக் குறித்துப் பாடியதில் பெரும் மகிழ்ச்சியுற்று, திருநீலகண்ட நாயனாருக்கு உருவச்சிலை அமைக்க எண்ணம் கொண்டோம் எனக் கூறினர். மேலும் வருடா வருடம் இவருக்கு சிறப்பான முறையில் விழாவை, தை மாத விசாகத்தன்று கொண் டாடி வருவதாகவும் கூறினர்.

அதுசமயம் வரும் பக்தகோடி மக்களுக்கு இல்லை என்னாது அறுசுவை அமுது படைத்து வரு வதும் அங்குள்ளோர் ஜாதிமத பேதமின்றி விழாவில் கலந்து கொள்வதும் திருநீலகண்டரது பெருமைக்கு ஒரு சான்றாகும்.

அடியேன் ஒரு சிறிதும் தமிழில் புலமை பெற்றவன் அல்லன்; மேலும் ஆராய்ச்சியாளனும் அல்லன். ஆனாலும், நீலகண்டரது வரலாற்றை ஆய்வு செய்ததில், அடியேனுக்கு மேலும் நல்ல நீதிகளையும், எதிர்பாராது அந்தமானில் காட்சி கொடுத்ததையும் நினைக்குந்தோறும், என்னை அறியாமல் இறை நாமமே சிறந்தது எனும் மூலக் கருத்தை உணரமுடிந்தது. இதனைத் தான் அருணகிரியாரும்

''முருகா என ஓர் தரம் ஓதும் அடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே''

எனத் திருப்புகழில் கூறியுள்ளதில் எவ்வளவு ஆழ மான கருத்து பொதிந்துள்ளது என்பதை, திருநீல கண்டர் வாழ்க்கை வரலாற்று ஒன்றே நிரூபித்து விடும்.

இதனால் மக்கள் உணர வேண்டிய நீதியை, நீலகண்டர் வரலாறு வாயிலாக அறியமுடிகிறது. ஆரணங்காம் மனைவியைக் கூடவே வைத்துக்கொண்டு காலமெல்லாம் காமம் தவிர்த்தல் கடினமென்பது இல் லறத்துள்ளோர் உணரக்கூடிய உண்மைதானே.

ஒன்றில் உறுதியாக இருந்தால், அதற்காக ஒருவன் என்னென்னவற்றை இழக்கிறானோ அவற்றை மீண்டும் பெறுவான் எனும் தத்துவத்தை நீலகண்டர் வரலாறு அறிவிக்கிறது. அதனால்தான் திருநீலகண்ட ரும், அவரது மனைவியாரும் பாழாக்கிய இளமையை மீட்டுக்கொடுக்க இறைவனே வலியவந்து ஆட்கொண் டார் எனக்கருதினால் அது பகுத்தறிவுக்கு மாறுபட்ட விளக்கமாக இருக்காது என்று அடியேன் கருதுகிறேன்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய் கின்ற பூங்கழல்
போற்றி போற்றி!!

- திருச்சிற்றம்பலம்

★

# வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்

– ''திருப்புகழ் தேனீ'

வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள் நம்மிடையே வாழ்ந்து 1950-ஆம் ஆண்டு வள்ளிமலைக் குகையில் சமாதி பெற்றார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் அர்த்தநாரி. 1870-ஆம் ஆண்டில் பிறந்த இவர் சிறு வயதிலேயே மடைத்தொழிலில் ஈடுபட்டார்.

மைசூர் சமஸ்தானத்தில் மடைத் தொழில் செய்து வந்தபோது இவருக்கு குன்மநோய் உண்டாயிற்று. பழனி சென்று ஆண்டவருக்கு அபிஷேகம் செய்யும் பாலைப் பல நாட்கள் பருகி நோய் தீரப் பெற்று திருக்கோயிலேயே தங்கி கோயில் பணியில் ஈடுபட்டிருந்தபோது தாசி ஒருத்தி பாடிய சந்தத்திருப்புகழ்பா ஒன்றைக் கேட்டு சிந்தையைப் பறிகொடுத்தார்.

கந்தன் புகழ் கூறும் எந்தை அருணகிரியாரை மானசிக குருவாக ஏற்று திருப்புகழ் கற்றுப் பாடியும் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் சென்று பரப்பியும் வாழ்ந்த இவர் துறவறம் பூண்ட புதிதில் தல யாத்திரை மேற்கொண்டார். பிறகு 1916-ஆம் ஆண்டு முதல் வள்ளிமலை மீது ஆச்ரமம் அமைத்துக் கொண்டு பாடும் பணியைத் தொடர்ந்தார்.

மக்கள் வயிற்றுப் பசியைப் போக்கப் பகலெல்லாம் பாடுபட்ட படிப்பறியா உழவர்கள் ஆன்ம பசிக்கு சுவாமிகளிடம் திருப்புகழ் பாடம் கேட்டனர். அந்நாளில் வள்ளி மலை கிராமத்து மக்கள் திருப்புகழ் பாடிக் கொண்டு வயலை உழுத காட்சி என்றும் மறக்க முடியாத அரிய நிகழ்ச்சியாகும்.

இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சில வியத்தகு நிகழ்ச்சிகளை இக்கட்டுரை கூறுகிறது.

ஒரு சமயம் அமர்நாத், கேதாரநாத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு திரும்பும் போது (பனிமலையாதலால்) சுவாமிகள் தமக்குத் தானமாகக் கிடைத்த கம்பளியைப் போர்த்துக் கொண்டு நடந்து கொண்டிருக்கையில் வழியில் ஒரு சாது, நம் சுவாமிகளை அணுகி கம்பளி ஒன்றையாசித்தார். சுவாமிகள் தம்மிடம் வேறு கம்பளி இல்லையென்று சொன்னவுடன் அச்சாது ''நீ போர்த்தியிருப்பது உன் அப்பன் சம்பாதித்ததா? என்று கேட்டு விட்டார். உடனே சுவாமிகள் தாம் போர்த்தியிருந்த கம்பளியை அவரிடம் கொடுத்து ''எங்கப்பன் சம்பாதிக்கவில்லை. உங்கப்பன் தான் சம்பாதித்தது'' என்று கூறி பழையபடி கோவண ஆண்டியாய் தண்டம் கமண்டலத்துடன் மேலே நடக்கலானார்.

சுவாமிகள் ஒருமுறை அயோத்தி சென்று ராமர் கோயிலைத் தரிசித்து விட்டு காட்டுவழியே ஊருக்குள் திரும்பிக்கொண்டிருந்தவர் ஒரு மரத்தடியில் தங்கினார்.

அம்மரத்தடியிலும் கிளைகளிலும் குரங்குகள் நடமாட்டத்தைக் கண்ட இவர் (சீதையை மீட்க ராமர் ராவணனுடன் போர் புரிந்த சமயத்தில் வானர சேனைகள் புரிந்த தீரச் செயல்களை விளக்கும்) ''வஞ்சங் கொண்டுந்திட'' எனத்துவங்கும் திருப்புகழ் பாடலை இசைக்கத்துவக்கினார். குரங்குகளுக்கு இப்பாடலின் பொருள் புரிந்துவிட்டது போலும்: உடனே அவைகள் மரத்திலிருந்து குதித்து சென்று பக்கத்தில் பஞ்சாபி வழிப்போக்கர்கள் தயார் செய்து கொண்டிருந்த ரொட்டிகளில் சிலவற்றை தூக்கிக்கொண்டு வந்து சுவாமிகளின் முன் போட்டன. சுவாமிகளும் காலையிலிருந்து ஆகாரம் ஏதுமின்றி பசியாக இருந்ததால் அவற்றை எடுத்து உண்ண ஆரம்பித்தார்.

கையில் தடிகளுடன் அப்பஞ்சாபியர் குரங்குகளைத் துரத்திவந்தனர். சுவாமிகள் ரொட்டியைத் தின்பதைப் பார்த்து தாங்கள் தயாரித்த ரொட்டி ஒரு சாதுவுக்கு உணவாகிறதே என எண்ணி திரும்பி விட்டனர். அன்று ஸ்ரீராம நவமி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிகள் திருச்செந்தூரில் தங்கியிருந்தபோது அருணகிரியாரை ஆண்டவன் எவ்வாறு தலங்கள் தோறும் அழைத்தனரோ, அதேபோன்று நமது சுவாமிகளையும் கதிர்காமம் வரும்படி அவர் கனவில் கட்டளையிட்டார்.

பல இடங்களில் சமையல் செய்தும், திருப்புகழ் பாடியும் கதிர்காமம் செல்லப் போதுமான பணம் சேர்த்துக் கொண்டார்.



திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலில் சீட்டு விற்பனையாளராகப் பணி புரிந்து பணியிலிருந்தபொழுது இறந்துபோன திரு முத்தான் என்பவரின் வாரிசுதாரரான அவருடைய மனைவி திருமதி இராசம்மாள் அவர்களுக்குக் குடும்ப நலநிதி ரூ. 75,000-க்கான வரைவோலையை சேலம் இணை ஆணையாளர் உயர்திரு ச. இளங்கோ, பி.ஏ., பி.எல். அவர்கள் வழங்குகிறார்கள். திருக்கோயிலின் உதவி ஆணையர் செயல் அலுவலர் திரு இரா. பத்மநாபன் அவர்கள் உடன் உள்ளார்கள்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கை செல்ல அனுமதியளிக்கும் ஆங்கிலேய துரையை அணுகித் தம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். அவ்வாங்கிலேய துரை சுவாமிகளின் தொழில் பற்றி விசாரித்தார். சுவாமிகள் தமக்கு மடைத்தொழில் என விடை பகர்ந்தார். ''எங்களுக்குப் பிடித்தமான புலால், போதை தரும் பானம் முதலியவற்றை நீங்கள் தயாரிக்க முடியுமா?'' எனக் கேட்டார். சுவாமிகளும் ''தயாரித்து உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் திருப்திப்படுத்துகிறேன்'' என்று பதில் கூறினார்.

ஒப்புக் கொண்டபடி இரயில் கத்தாழையை நேர்த்தியாகப் பக்குவம் செய்து மீனாகவும், மூங்கிலின் உட்பாகத்தை எடுத்து சதையாகவும், ரவை அப்பளத்தில் உளுத்தம் பருப்பைச் சேர்த்து முட்டையாகவும், கஞ்சாத் தழையைக் காய்ச்சி சாரு எடுத்து சாராயமாகவும் (சோம்பு பூண்டு போன்ற வாசனைப் பொருள்களை சேர்த்து) சமைத்துத் துரையவர்களுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் பரிமாறித் தன் திறமையை வெளிப்படுத்தினார். துரையவர்கள் சுவாமிகளுக்கு (Passport) கப்பல் மார்க்கமாக இலங்கை செல்ல அனுமதித்ததுடன் வழிச் செலவுக்கு சிறிது பணமும் கொடுத்தனுப்பினார்.

வள்ளிமலை சுவாமிகள் சில காலம் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். ரமண மகரிஷிகளும், ஈசுவர சுவாமிகளும் இவரைத் ''திருப்புகழ் முருகன்'' என பாசத்துடன் அழைப்பார்கள். அப்பொழுது சில நாட்களில் மூவரும் சேர்ந்து கிரிவலம் வருவது வழக்கம். அவர்களுடன் பலர் திருப்புகழ் பாடிக்கொண்டு செல்வார்கள்.

அங்ஙனம் ஒரு நாள் கிரிவலம் வரும் சமயத்தில் சுவாமிகள் ''வேடிச்சி காவலன்'' வகுப்பைப் பாடிக் கொண்டு வந்தார். அப்பாடலின் ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் ''காவலனே! காவலனே! வேடிச்சி காவலனே! என்ற மகுடத்தை அனைவரும் பாடுவர். அப்போது ரமணர் வேடிக்கையாக'' ஏமேமிகாவலனே! எந்தெந்தக் காவலனே'' என வேடிக்கையாகத் தெலுங்கில் (என்னென்ன வேண்டும்) கேட்டார். கூட்டத்தில் வந்த ஒரு சாது ''இட்லி காவலனே! காபி காவலனே!'' என வேடிக்கையாகக் கேட்டார்.

எல்லோரும் இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே சிறிது தூரம் வந்ததும், உண்மையாகவே ஒரு அன்பர் கூடைநிறைய இட்லியும், தவலை ஒன்றில் காபியும் கொண்டுவந்து பக்தர்கள் முன் வைத்தார். எல்லோரும் களைப்பு தீர உண்டு சிறிது இளைப்பாறி பாராயணத்தைத் தொடர்ந்தனர்.

சுவாமிகள் ஆண்டு தோறும் மூல நட்சத்திர நாளன்று அருணகிரியார் ஜயந்தியைக் கொண்டாடி வந்தார். அதற்கென ஒரு சமயம் சென்னை ராயபுர சேரி ஒன்றில் ஆசார நியமம் அநுஷ்டிக்கும் சுத்த சைவர்களான சில அடியார்களுடன் பஜனையுடன் சென்றார். தெருவில் ரூ. 200/- கொண்ட பையொன்று சுவாமிகள் கண்ணில் பட்டது. அதன் உரிமையாளரைத் தேடியும் அச்சேரியில் யாரும் கிடைக்கவில்லை. ''எங்களுக்குள் யாரும் இவ்வளவு பணம் வைத்திருப்பவர் யாரும் இல்லை. வேறு தனவந்தர் யாரும் இச்சேரியில் வரவில்லை'' என்று கூறி பணத்தை சுவாமிகளிடமே அன்னதானத்திற்கென நிதி திரட்ட ஏற்றுக்கொள்ளும் படி கூறிவிட்டனர்.

★ ★ ★

# அம்பிகையின் திருவருள்

– திருமதி மீனாட்சி கோகுலவாசன்

அம்பிகையின் ஆயிரம் திருநாமங்கள் கொண்டவை சகஸ்ரநாமம் ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் கொண்டவையும், நம்மை வழிநடத்த வல்லவையும் ஆகும். அந்நாமாக்களில் ஒன்று 'அபர்ணா'. இந் நாமம் மிக அழகிய திரு நாமமாகும்.

'பாஸ்கரராயர்' என்ற மகாராஷ்டிர அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் தலை சிறந்த தேவி உபாசகராக விளங்கி வந்தார். அவர் அம்பிகையின், 'ஸ்ரீலலிதாசகஸ்ர' நாமங்களுக்கு பொருளுரை எழுதியுள்ளார். சமஸ்கிருத மேதையான அவர், தேவியின் திருநாமங்களைக் கூறும் போது, அம்பிகையுடன் உரையாடுவது போன்ற உணர்வுகளுடன் தான் கூறுவார்.

தமிழ் நாட்டில், தஞ்சாவூரில் சரபோஜி மன்னர்கள் ஆண்டுவந்தகாலம் அது. பாஸ்கரராயரின் மேதா விலாசத்தைக் கேள்வியுற்ற மன்னவன், அவரைத்தமது அரண்மனையிலேயே ஆஸ்தான பண்டிதராக இருக்கும் படி வேண்டினார். பாஸ்கரராயரும், மன்னரின் அன்புக்கு உட்பட்டு, தமது மனைவியோடு வந்து நலமாய் சிறிது காலம் வாழ்ந்து வந்தார். ஆனால், ராஜாங்க சுகபோகம், ஒருவருக்கு பணிந்து அவர்களின் குற்றேவலுக்கு அடிமைப் படுதல் இவை எல்லாம் பாஸ்கரராயருக்கு, தான் ஒரு கைதியைப்போல் உணரச் செய்தது. இவ் விஷயத்தை மன்ன ரிடம் கூறிவிட்டு, அவர் தனியே சிறிய வீடு ஒன்றில் அவரது மனைவியுடன் இல்லறம் நடத்தி வந்தார்.

ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில், 'மகாராக்னி' என்றும், 'ஸ்ரீமத் சிம்மாசனேஸ்வரி' என்றும் திருநாமங்கள் வரும்போதெல்லாம், ''இந்த ஏழையின் வீட்டில் இருக்கும் உனக்கு எப்படி ராஜமாதா போல் இருக்க முடியும்''...!? என்றே தினமும் வருந்தி வரலானார். ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரரான பணக்காரரிடம், வட்டிக்குக் கடன் வாங்கி, சிம்மாசனமும், அழகிய தங்கத்தில் மாலை ஒன்றும், கிரீடமும் செய்து, அம்மனுக்கு அணிவித்து, பட்டாடை உடுத்தி அழகு பார்த்து பார்த்து மகிழ்ந்து போனார் பாஸ்கரராயர். இவ்வாறாக மாதங்கள் பல ஓடி விட்டன. அம்பிகையை ராஜராஜேஸ்வரியாகப் பார்த்து மகிழ்ந்த பாஸ்கரராயருக்கு, அதற்காக வாங்கிய கடனைப்பற்றிய நினைவே வரவில்லை. ஆனால் பக்கத்து வீட்டுக்காரரோ, இவர் பணம் தருவார் தருவார் என்று காத்து நின்றதுதான் மிச்சம் ஆனது. கடன் வாங்கிய பாஸ்கரராயரோ அந்த நினைவே இல்லாமல் அம்பிகையின் நினைவி லேயே காலங்கழித்து வந்தார். அதனால் கடன் கொடுத்த பக்கத்து வீட்டுக்காரருக்குப் பொறுமை இழந்து போய் விட்டது. ஒருநாள், கோபம் அவரையும் மிஞ்சவே, பாஸ்கரராயரின் வீட்டிற்கு முன்னால் நின்று கொண்டு, தெருவே கூடிவிடும் அளவிற்குக் கடுமையாக, பாஸ்கர ராயரைத் திட்டித் தீர்த்தார்.

அந்த சமயம், பாஸ்கரராயர் அம்பிகைக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். 'அபர்ணா' என்ற திருநாமம் வந்தபோது, ''அம்மா! உனக்கு எதற்கு இந்தத் திருநாமம்? உன்னை வேண்டி நிற்போரின் கடனைத் தீர்த்து வைப்பவளும், உன் பக்தர்களைக் கடனாளியாக இல்லாமல் காத்துக் கொள்பவளும்' என்ற பொருள் கொண்ட இந்த ஆபத்சகாய நாமம் எதற்கு? எனக்கு இந்த அவமானம் ஏற்பட்டதால் இனி உனக்கு அர்ச்சனை செய்வதை நிறுத்தி விடுவேன்'', என்று கூறி கோபித்துக்கொண்டு வெளியே போய் விட்டார்.

பாஸ்கரராயர் வெளியே சென்றவர், பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்று, ''ஐயா! கோபப்படாதீர்; எனது மனைவிக்கு மகாராஷ்டிரத்தில் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அவளது அண்ணனிடம் விவரம் சொல்லி, நிலத்தை விற்றுப்பணத்தைக் கொண்டு வரச் சொல்லுகிறேன். இன்னும் சில மாதங்கள் எனக்கு அவகாசம் தரக்கேட்டுக் கொள்கிறேன்,'' என்று சொல்லி சில மாதங்கள் அவகாசம் கேட்டுக்கொண்டார்.

சில நாட்கள் சென்றவுடன், பக்கத்து வீட்டுத் தனவந்தரின் மனைவி, பாஸ்கரராயரின் கால்களில் விழுந்து வணங்கி, ''ஐயா! உங்கள் மனைவி ஊரி லிருந்து நேராக எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்; நீங்கள் பெற்ற கடனை, வட்டியும் முதலுமாக அடைத்துவிட்டு, மோர் குடித்துவிட்டு இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். என் கணவர் உங்களை மரியாதை இல்லாமல் நடத்தியதற்கு மன்னிக்கவும்...'', என்று பலவாறு சொல்லி மன்றாடிக்கேட்டுக் கொண்டாள்.

பாஸ்கரராயருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை! தன்னையும் பார்க்காமல் கடனைத் தீர்த்தால்



கோவை மாவட்டம் பேரூர் அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயிலில், சிவாச்சாரியர்கள், பூசாரிகளுக்கு ஆகமம் மற்றும் திருமுறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் மூன்று மாதங்கள் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பயிற்சியாளர் களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா 6.2.2002 அன்று இத்திருக்கோயிலில் நடைபெற்றது. இவ் விழாவில் கோவை இணை ஆணையர் திருமிகு போ. இராமராஜு, பி.எஸ்.சி., பி.எல். அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் திரு கே. தியாகராஜன், எம்.ஏ., பி.எல். அவர்கள் உடன் உள்ளார்கள்.

போதுமென்று நேராகப் பக்கத்து வீட்டுக்குச் சென்ற மனைவியைக் காண ஓடினார்....! ஆனால் ... அவள் அங்கு இல்லை, எல்லோரும் தேடினார்கள். யார் கண்ணிலும் அவள் புலப்படவில்லை. 'கடன் தீர்க்கப் பட்டது' என்ற கையெழுத்திட்ட ரசீதை வாங்கிப் பார்த் தார். மனைவியின் கையெழுத்துதான். ஆனால் அவளை அன்று காணவில்லை! அதன்பின் பலமாதங் கள் காணப்படவில்லை! இந்த மர்மத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.


ஒரு நாள் பாஸ்கரராயரின் மனைவி திரும்பி வந்தாள். ஆனால் 'நிலத்தை விற்று, பணம் கொடுக்க இப்போது வசதியில்லை, என்று கூறி அவளது அண்ணன் மறுத்து அனுப்பிவிட்டார் என்ற செய்தியுடன் வந்தவ ளாக - வெறுங்கையுடன் அழுத நிலையில் வீட்டிற்கு வருகிறாள். அப்படி என்றால் அப்போது வந்தது யார்? கடன் தீர்த்திட வந்தவள், வேறு யாராக இருக்க முடியும், என்று நினைத்தவர் தம் மனைவியிடம் கடன் தீர்ந்த விவரங்களைக் கூறியவர். ''அப்படியானால் 'அபர்ணா' தான் தன் கடனைத் தீர்த்தாள். அவளுக்குத்தான் கருணை இருக்கும்.'' என்று கூறினார். அவர் மனைவியும் தன் ரூபத்தில் வந்து, தன் கையெழுத்தைப் போல் எழுதிக் கொடுத்து, தங்களைக் கடன் தொல்லையில் இருந்து நீக்கிய 'அபர்ணா' தேவியை மனமுருகி பணிந்தாள். பாஸ்கரராயரும் அம்பிகையின் அருளை எண்ணி எண்ணி வியந்தவராக மனம் உருகிப்பணிந்தார். அவ ருடைய மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை எனலாம்.

ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் 754-வது நாமம் 'அபர்ணா' வாகும்.

★★★

# இல்லாமல் இருப்பதே இறைமை

**- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்**



அள்ளிக் கொள்வதில்லை செல்வம்,
அள்ளியும் நிறைவதில்லை மனமும்,
துள்ளித் திரிவதில்லை அறிவு
துள்ளாமல் இருப்பதில்லை இளமை. (1)

படித்தும், அறிவதில்லை படைப்பை,
படிக்காமல் பெறுவதில்லை அறிவை,
நொடித்தும் இழப்பதில்லை நேர்மை,
நொடிக்காமல் காண்பதில்லை வறுமை,
துடித்துப் பெறுவதில்லை இன்பம்,
துடிக்காமல் உணர்வதில்லை இழப்பை,
மடிந்தும் மடிவதில்லை ஆத்மா
மடியாமல் தொடர்வதில்லை பிறப்பு; (2)

சொல்லித் தெரிவதில்லை உணர்வுகள்,
சொல்லியும் புரிவதில்லை இறைமை;
அல்லி மலர்வதில்லை கடலில்,
அல்லியும் மணப்பதில்லை மலர்ந்தும்,

இல்லையே என்பதில்லை இயற்கை,
இருந்தும் இல்லாமை செயற்கை,
கல்லாமல் அறிவில்லை செயற்கை,
கல்லாமல் கற்பதெல்லாம் இயற்கை,
சொல்லித் தெரிவதெல்லாம் செயற்கை,
சொல்லாமல் தெரிவதெல்லாம் இயற்கை,
இல்லாமல் இருப்பதில்லை செயற்கை,
இல்லாமல் இருப்பதுவே இறைமை.

★ ★ ★

# சிவனடியார்களும் பன்னிரு திருமுறையும்

- மயிலை சிவஞான ஜோதி சிவசக்தி அம்மையார்

ஓம்! ஓம்! ஓம்!
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப் பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!

பன்னிரு திருமுறைகள் சிவநெறியையும், சிவபெருமானின் மகிமையையும் விளக்கும் செந்தமிழ் நூல்களாகும். நாளும் இனிய தமிழ் இசையினால், தெய்வீகத் தமிழ் மொழியினால், சிவபெருமானைப் போற்றிப் பாமாலைகள் பலவும் சிவனடியார்கள் பாடினார். சைவசமயம் சிவனடியார்களை மிக உயர்ந்தவர்களாக மதித்துப் போற்றுகின்றது. இறைவன் புகழே தம் பேச்சு, இறைவன் நாமமே தமது மூச்சாக வழிபடும் சிவனடியார்களோடு இணங்கியிருத்தல் நமது மனம் பண்படத் துணை புரியும். ஆண்டவனை அடைய வழி பிறக்கும். அடியார்கள் அருளிய நூல்களே திருமுறைகள். சிவபெருமானிடத்தும் சிவனடியார்களிடத்தும் திருத் தொண்டு செய்து மகிழ்ந்திடும் சிவனடியார்களான நாயன்மார்களின் மகிமையை சொல்ல முடியுமா? சொல்லினில் அடங்குமா?

**ராகம் :- ஸஹானா தாளம் :- ஆதி**

**பல்லவி**

நாயன்மார் மகிமையை சொல்வ தென்றால் எனக்கு
நாள் ஒன்று போதாது அம்மா?

**அனுபல்லவி**

சிவனுடன் மருவி சிவசாயுஜ்ய பதவியை
சிறிதும் சிரமம் இன்றி பெற்ற சிறப்புள்ளவர்

***சரணம் - 1***

அன்பான ஆசைகளை அடியுடன் வெறுத்தவர்
அரனேதான் கதி என்று அடிக்கடி ஓலமிட்டு
ஆனந்தக் கண்ணீர் விட்டு அடைபட்ட குரலுடன்
சிவசிவ என்று சொல்லும் அடியார்களான அந்த
(நாயன்)

***சரணம் - 2***

இறப்பு பிறப்பு அற்ற, சிறப்புற்ற அருள் பெற்ற
இறைவனின் பேரன்பு அடியாரே நாயன்மார்
இவ்வுலகின் தாய் தந்தை சிவசக்தியே என்ற
இனிய உணர்வினை உணர்ந்தவர் நாயன்மார்
(நாயன்)

***சரணம் - 3***

திருவருள் ஒளியுடனும் குன்றாப் பொலிவுடனும்
சிவனின் பேரொளியில் கலந்தவர் நாயன்மார்
திருநீறே உடலாக சிவமணியே உடையாக
சிவன் நினைவே உயிராகத் திகழ்பவர் நாயன்மார்
(நாயன்)

***சரணம் - 4***

உடலோடு வாழ்ந்தாலும் உடலில் பற்று இன்றி
உலகோடு வாழ்ந்தாலும் உலகில் பற்று இன்றி
உடலில் உள்ளத்தில் சிவனுடனே பற்று கொண்டு
தம்முள்ளே தந்தை தாயைக் கண்டவர் நாயன்மார்
(நாயன்)

***சரணம் - 5***

ஐம்புலன்களை வென்று ஐந்தெழுத்தை உச்சரித்து
நாவினை அடக்கியே மோனத்தவம் செய்வார்
கூற்றுவனை அஞ்சி ஓடோடச் செய்தவர்
கூத்தனின் திருக் கூத்தை இன்பமாய்க் கண்டவர்
(நாயன்)

***சரணம் - 6***

சிவனை மறவாதப் பேரின்பம் கொண்டவர்
சிவனின் உலகம் கண்டு சிவனுடன் கலந்தவர்
சிவனின் உருவைப் பெற்று சிவமாகத் திகழ்பவர்
சிவனுடன் கலந்ததால் சிவமாகித் திகழ்பவர்
(நாயன்மார்)

★★★

திரு என்பது தெய்வத் தன்மை பொருந்திய அருட்பொலிவாம் அழகு ஆகும். இவைகளைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும் நல்ல பண்புகள், முறையாகும். மரணம் இல்லாப் பெருவாழ்வு பற்றியும், இறைவனுடன் கலந்தப் பேரின்பப் பேரானந்தத் தாண்டவம் பற்றியும், எல்லோருக்கும் எடுத்துரைத்து, கற்பிக்கும் நூல்களே, இறைநூல், அருள்நூல், பேரின்ப நூல், இந்த நூல்களே சிவன் அடியார்கள் நமக்களித்த திருமுறைகளாகும்.

பண்புகளாம் பலவித குணங்களையும் அளித்து, அதனால் உயிருக்கு இறைவனோடு உள்ள தொடர்பினையும், உயிர் இறைவனோடு கலக்கின்ற வழிமுறைகளையும், அதனால் உயிருக்கு உண்டாகும் நன்மைகளையும், சிவபெருமானின் அருமை பெருமைகளையும் நூல்களின் மூலம் கூறுவது திருமுறையாகும். திரு என்பது சிவத்தையும், முறை என்பது சிவன் அருளையும், அதனால் உயிர் எய்திடும் பேரின்பத்தையும் திரு என்று கூறலாம். இறைவனை அடைந்திடும்

வழிமுறைகளையும், பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப மாம் வீட்டு நிலை பற்றியும், உயிர், உலகம், கடவுள் இவைகளின்இயல்புகளையும் இவற்றுக்கு உரிய தொடர்பு களையும் திருமுறை விளக்குகின்றது.

இறைவன் உறைந்திடும் திரு க்ஷேத்திரம், சிவனடியார்களின் அருள் உடலாம் குருக்ஷேத்திரம். அமிர்தமயமாகிய, அடியாரின் அருள் உடலாம் ஒளி உடலே குரு க்ஷேத்திரம். மாணிக்கத் தங்கமய ஜோதி யாம், சிவகுரு அமர்ந்த உடல் குருக்ஷேத்திரம். அருள் உடலில் அறிவுறுத்தும் சிவனடியார்களின் அறிவுரையே சிவகுரு அருளிய ஞானகீதையாகும். திருவடி இன்பம் அடைந்த சிவனடியார்கள் திருவாய் மலர்ந்தருளியப் பாடல்களே ஞான அறிவாம் ஞான உபதேசமாம் கீத உபதேசம் ஆகும். சிவனடியார்கள் ஓதிய சிவன் நாமம் சுவைக்க சுவைக்கத் திகட்டாது தித்திக்கும்.

**ராகம் :- ஆபேரி** **தாளம் :- ஆதி**

**பல்லவி**

சுவைக்கச் சுவைக்கத் திகட்டாது / தித்திக்கும் சிவன் நாமம்/
பாடப் பாடப் பரவசம் / படிக்கப் படிக்க சுவை ரசம்/

**அனுபல்லவி**

நினைக்க நினைக்க மனம்வசம் / நாவில் இனிக்கும் தேன் ரசம்
நினைவெல்லாம் இன்பரசம் / கனவிலும் சுவை ரசம்/ (சுவை)

**சரணம்**

நாட நாட சமரசம் - நாம் / நாடியதால் அருள் வசம்/
நாடும் இன்பம் கனிரசம் / நாதன் தானே மதுரசம்/
நாவினிக்க நாமம் பாடும் / உள்ளத்திலே பரவசம்/
நாதன் உடலில் புகுந்துவிட்டால் / நாவில் நாதத் தமிழ்ரசம்/ (சுவை)

அடியார்கள் தாங்கள் கண்டு களித்த பேரின்ப அனுபவங்களைப் பாடல்களாகப் பாடி வைத்துள்ள னர். அவைகளே பன்னிரு திருமுறைகளாகும். சிவ னடியார்கள் தாம் பெற்ற பேரின்ப அனுபவங்கள் யாவரும் பெற விரும்பி, நமக்குத் திருமுறைகள், வழிமுறைகள், நெறிமுறைகளைப் பாடல்களாகப் பாடி வைத்துள்ளனர். இவைகள்யாவும் இறைவனை அடைந் திட உதவும் சிறந்த சத்துக்களாகும். சத்பாத்திரமாம் சிவனடியார்களின் உடல் மறைந்தாலும், அடியார்கள் நமக்காக எழுதி வைத்த சத்துக்கள் மறைவதில்லை. எழுத்துக்களாக, புத்தகங்களாக உள்ளன. அடியார்களின் அறிவுரைகளை நம்பி படிக்க வேண்டும். ஏட்டிலே படித்தவற்றை காற்றினில் பறக்க விடாமல் ஏற்றமுள்ள அறிவுரையை ஏற்றுக்கொண்டு சிறந்திடுங்கள்.

திருமுறைகள் ஓதினால் கொடியவர்களும் திருந்தி நல்லவர்களாவது உண்டு. திருமுறைகளின் அருமை பெருமைகளுக்கு அளவே இல்லை. மனிதன் திருந்துவதற்காகவே அடியார்கள் திருமுறைகள் எழுதி வைத்தாலும், அதைப்படித்து அதன் படி நடந்து, இறைவனின் அருள் பெற மனிதன் இறைவனருளில் கொடுத்து வைக்கணும்

**ராகம்:- தர்பாரிகானடா** **தாளம் :- ஆதி**

**பல்லவி**

இறைவனை அடைந்திடும் எளிய முறையினை
எடுத்துச் சொல்வணும் - அடியார்
தொகுத்துக் கொடுக்கணும், இனிதாய் வகுத்துக் கொடுக்கணும்
வகுத்துக் கொடுத்தாலும் தொகுத்துக் கொடுத்தாலும்
இறைவனை அடைந்திடக் கொடுத்து வைக்கணும் - மனிதன்
இறைவன் அருளில் கொடுத்து வைக்கணும்

**சரணம் - 1**

திருந்தாதவரும் திருந்திடும் வழியினைத்
திருத்திக் கொடுக்கணும் - அடியார்
வகுத்துக் கொடுக்கணும் - எளிதாய்
திருத்தப் பார்க்கணும்
திருத்திக் கொடுத்தாலும் வகுத்துக் கொடுத்தாலும்
திருத்தி அருள்பெறக் கொடுத்துவைக்கணும் - மனிதன்
இறைவன் அருளில் கொடுத்து வைக்கணும்.

**சரணம் - 2**

எளிதாய் இனிதாய் அடைந்திடும் வழியினை
புகட்டிக் கொடுக்கணும் - அடியார்
திரட்டிக் கொடுக்கணும் - எடுத்துப்
புகட்டிக் கொடுக்கணும்
திரட்டிக் கொடுத்தாலும் புகட்டிக் கொடுத்தாலும்
ஆர்வமாய் அடைந்திடக் கொடுத்து வைக்கணும் - மனிதன்
இறைவன் அருளில் முயற்சி எடுக்கணும் (இறை)

பன்னிரு திருமுறை சித்தாந்த சைவர்களின் வேதம். சைவ சமயம் உலகில் உள்ள நெறிகளுள் மிகப் பழமையானது. சிறப்பானது. சிவ பெருமானை முழு முதற் கடவுளாகக் கொண்ட நெறி சைவ நெறியாகும். திருமுறைப் பாடல்கள் அனைத்துமே இறைவனின் வாக்கு ஆகும். திருமுறைகள் யாவும் மந்திரங்களே, இறைவன் மந்திர வடிவில் உள்ளான். திருமுறைப் பாடல்கள் பாடுபவர்களின் வாக்கில் நாக்கில் சிவ பெருமான் உள்ளான். திருமுறைகளைப் பாடியே கோயில்களில் அர்ச்சனை செய்யப்படுகின்றது. திருமுறை கள் ஊழ் வினையை மாற்றும். இறந்தவரை எழுப்பும்.

வீடு பேற்றை வழங்கும். திருநீற்றின் பெருமையை திருமுறை பேசுகின்றது.

திருமுறைப் பாடல்களை சாதி சமய பேதமின்றி யாவரும் ஓதலாம். தமிழ் வேதமாகிய திருமுறைகள், பாடுபவர் உள்ளத்தையும் கேட்பவர் நெஞ்சத்தையும் உருக்க வல்லது, நெருப்பில் அழியாதது. ஆற்றுநீரை எதிர்த்துச் செல்லும். திருமுறைகள் பக்தியையும் பண்பு களையும் உணர்த்துகின்றது. திருமுறைகளைப் படித்து, இறைவனை அடைய வேண்டும். ஆர்வம் கொண்டு முயற்சி செய்யும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் இறைவனை அடையலாம். சிவமூல மந்திரமே ஐந்தெழுத்தாம் சிவ மருந்தாகும். சிவனின் திருநாமமாம் மருந்து அஞ்சேல் என அபயம் தரும் மருந்து. தஞ்சம் அடைந்தோர் நெஞ்சினில் அருட்ஜோதி மருந்து. அச்சம் தவிர்த்து ஆட்கொண்டு, இச்சையுடன் அணைத்து இணைத்தாடும் மருந்து. பிறவிப்பிணி நீக்கிடும் மருந்து. சிரசின் உச்சியில் சிவ ஜோதி மருந்து. மா அம்பல மருந்தே மாஜோதியாம் சிவ மருந்தீசன். சிவ ஜோதீசனே சிவ மருந்தாகும்.

ராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

**பல்லவி**

சிவ மருந்து! சிவ மருந்து!
சிவ மருந்து! சிறப்புத் தரும் மருந்து!
அரும் மருந்து பிறப்பு அறும் மருந்து!
சிவமருந்து! சிவ மருந்து!

**அனுபல்லவி**

சுவைக்க சுவைக்கத் திகட்டா மருந்து
சுவைத்தால் இன்பம் பெருக்கும் மருந்து (சிவ)

**சரணம் - 1**

நாவினில் இனித்திடும் நல்ல மருந்து
நமசிவாய என்ற தேவ மருந்து
நான்மறை உரைத்த திருமருந்து
நால்வர்கள் உண்ட சிவ மருந்து (சிவ)

**சரணம் - 2**

சிந்தையில் இனித்திடும் சித்தமருந்து
சிவய நம என்ற சித்தமருந்து
சிவ இன்பம் பெருக்கிடும் இன்ப மருந்து
சிவயசிவ என்ற இன்ப மருந்து
சிவமாம் நிலையினைத் தந்திடும் மருந்து
சிவசிவ சிவ என்ற சிவ மருந்து! (சிவ)

சைவ சமயக் குரவர்களில் மாணிக்க வாசகப் பெருமானுக்கு மட்டுமே, சிவ குருவாக எழுந்தருளி வந்து அருள் புரிந்து, உபதேச தீக்கையும், திருவருளும் திருவடிப் பேரின்பமும் கிடைத்தன. சுந்தரர் பாட்டுக்கு முதலடி எடுத்துக் கொடுத்து, சுந்தரரைப் ''பித்தா பிறை சூடிப் பெருமானே அருளாளா'' என்று பாட வைத்ததும் சிவ பெருமானே. திருஞான சம்பந்தக் குழந்தைக்கு, ஞானப்பால் கொடுத்து, 'தோடுடைய செவியன்' என்று பாடவைத்ததும் சிவபெருமானே. மெய்கண்ட தேவர் மூன்று வயதில் 'சிவஞான போதம்' இயற்றியதும் சிவபெருமானின் திருவருளில் தான். குமர குருபர அடிகள் ஐந்துவயதில் சிவ பெருமானின் திருவருள் பெற்றார்.

மெய்கண்டாரின் சிவஞான போதத்துக்கு விரி வுரையாகிய பாடியம் எழுதியவர். சிவஞான முனிவர் அந்தப் பாஷியம் அரங்கேற்றிய இடம், திருப்பாடிய நல்லூர் ஆகும். அருள் மிகு திருலோக நாயகி சமேத திருநீற்றீஸ்வரர் எழுந்தருளி திருவருள் புரியும் புண் ணிய க்ஷேத்திரம் திருப்பாடிய நல்லூராகும் என்று வடலூர் ராமலிங்க சுவாமிகள் கூறியருளியுள்ளார்.

அருள்மிகு பாடிய நல்லூர் பரமனை அடியேன் பாராமல் பாடித் தேடிச் சென்று பாடிப் பணிந்து, எட்டியும் எட்டாத நம் தந்தை சிவபெருமானை எட்டே மாதத்தினில் எட்டித் திருவடிப் பேரின்பம் அடைந் தேன். 1988-ம் ஆண்டு ஐப்பசி மாதம் நவம்பர் 12-ம் தேதி அர்த்த ராத்திரியில் அருட்பெருஞ்ஜோதியாம் சிவபெருமானின் திருவடிப் பேரின்பம் அடைந்தேன். திருப்பாடிய நல்லூர் சிறந்த புண்ணிய க்ஷேத்திரம் ஆகும். பூலோகக் கைலாயம் ஆகும்.

சிவனடியார்களின் திருமுறையாம் அருளுரை பெயருக்கும் புகழுக்கும் அல்ல. யாவரும் அடியார் போல் பேரின்பம் அடைந்திடத்தான். பக்தியும் பண்பும் புகட்டல் புகழுக்கும் பொருளுக்கும் அல்ல. யாவரும் உடையவனாம் இறைவனை அடைந்திடத்தான். பரம னின் திருப்புகழ் உரைத்தல், பறைசாற்றி மகிழ்ந்திட அல்ல. யாவரும் தாய்தந்தையாம் பரமனின் திருவடி அடைந்திடத்தான்.

சிவனடியேனாகிய அடியேனும், யான் பெற்ற பேரின்பம் யாவரும் பெற விரும்பி, நூல்கள், பாடல்கள், தத்துவ விளக்கங்கள், சிவனருளில் எழுதிவைத் துள்ளேன். ஆனால்,

எத்தனைதான் உரைத்தாலும் இத்தனை உபதேசமும்
அத்தனையும் கேட்பவர்க்கே ஞானத்தங்கமே!
இத்தனையும் ரசிப்பவர்க்கே ஞானத்தங்கமே!
இத்தனையும் ருசிப்பவர்க்கே ஞானத்தங்கமே!
ஞானத் தங்கமே!
சுவயம்பு ஜோதியான சுதந்திர ஜோதியே
சுவயம்புவான உன்னை வையகமும் பெறவேண்டும்
யான் பெற்ற இன்பம் இந்த வையகமும்
பெற வேண்டும்.

ஓம்! ஓம்! ஓம்!

அருட் பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

# கருவைக் காத்த கருணைக்கடல்

- புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ., பி.எட்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் அருளுடன் பஞ்ச பாண்டவர்கள் தர்மத்தைத் தழுவி வந்தனர். ஆனால் கௌரவர்களோ அதர்மமே உருவாகி வந்தனர். தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்த போரில் தர்மம் துணை நிற்க பாண்டவர்கள் வென்றனர். அதர்மத்தால் கௌரவர்கள் வேரோடு அழிந்தனர்.

தீயவர்களுடன் (கௌரவர்கள்) சேர்ந்த துரோணாச்சாரியரும் கொல்லப்பட்டார். அவரது மைந்தன் அசுவத்தாமன் மட்டும் பிழைத்து விட்டான். தன் தந்தையைக் கொன்ற பஞ்ச பாண்டவர்களின் பிற்கால சந்ததிகளாகிய இளம் பஞ்ச பாண்டவர்கள் அனைவரையும் கொல்லத் திட்டமிட்டான். இரவோடு இரவாக யுத்த தருமத்திற்கு மாறாக பாசறைக்குத் தீ மூட்டினான். அந்தோ பரிதாபம், பாண்டவர்கள் குலம் தழைக்க ஒரு பிள்ளையும் பிழைக்காமல் அனைவரும் மாண்டனர். ஆனால் அர்ச்சுனன் மகன் அபிமன்யுவின் மனைவியான, விராட தேசத்து மன்னன் மகள் உத்தரையின் வயிற்றில் ஒரு கருவளர்ந்து கொண்டிருந்தது. இக்கருவை அழிக்காமல் விட்டால் பாண்டவர்கள் குலம் தழைத்து விடும் என்று உணர்ந்த அசுவத்தாமன் அக்கருவையும் அழிக்க திட்டமிட்டான். முப்பெரும் பாபங்களாகிய கோஅத்தி, பிரம்மஅத்தி, சிசுவத்தி ஆகிய வற்றுள் ஒன்றான பாபமாகிய சிசுவத்தியையும் செய்யத் துணிந்துவிட்டான். அக்கருவைக் கலைக்க பிரம்மாஸ்திரத்தை பிரயோகப்படுத்திக் கருவைக் கட்டிவிட்டான்.

இறையறிந்த உத்தரை தாங்க முடியாத துயரத்தையடைந்தாள். இந்த பிரம்மாஸ்திரக் கட்டை அறுக்க ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒருவனால் மட்டுமே முடியும் என்றறிந்த உத்தரை பகவானைத் துதித்து.

''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே''
என்ற துவய மந்திரத்திற்கு ஏற்ப, சரணம் அடைந்தாள்.

தன்னைச் சரணமடைந்த கஜேந்திரன், திரௌபதி பிரகலாதன், சுக்ரீவன், விபீடணன் ஆகியோரைக் காத்து ரட்சித்த கிருஷ்ண பகவான் தமது திருக்கரத்தால் உத்தரையின் வயிற்றைத் தடவினார். உடனே ''பகலவனைக் கண்ட பனி போல'' கருவைக் கட்டியிருந்த பிரம்மாஸ்திரம் விலகியது. கருவில் இருந்த பாண்டவர்களின் வாரிசு பிழைத்தது. உத்தரை ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீர்த்தியை உணர்ந்து, வழிபட்டாள். அக்கருதான் வளர்ந்து ஆண் மகவாகப் பிறந்தது. அவரே பரீட்சித்து மகராஜன் எனும் பாண்டவர் குல விளக்கானார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் மைத்துனன்மார்களாகிய பஞ்ச பாண்டவர்களின் காதலியாகிய திரௌபதியை சூதாட்டத்தில் பணயமாக வைத்துத் தோற்றதும், துர்ச்சாதனன் திரௌபதியின் மானத்தைப் பறிக்க எண்ணியதும், திரௌபதி கோவிந்த நாமம் சொல்லித்தன் மானத்தைக் காத்துக் கொண்டதும் அறிவோம். அப்போது திரௌபதை தனது மானத்தைப் போக்க தனது ஆடையை இழுத்த துர்ச்சாதனனைப் பழிவாங்க நினைத்தாள். துர்ச்சாதனன் போர்க்களத்தில் கொல்லப் பட்டு, அவன் இரத்தத்தைக் கொண்டு எனது முடியை சீவி முடிப்பேனேயல்லாமல், அதுவரை முடிக்க மாட்டேன் என்று சபதம் செய்தாள். திரௌபதியின் சபதத்தை முடிக்க துர்ச்சாதனனை பாரதப் போரில் சாகடித்து அவள் கூந்தலை முடிக்கச் செய்தான். திரௌபதியின் சபதமும் நிறைவேற்றினான். மைத்துனர்களாகிய பாண்டவர்கள் முடிசூடும்படிச் செய்தார்.

இவ்வாறு ஸ்ரீமந் நாராயணன், தமது கிருஷ்ணாவதாரத்தில் திரௌபதியின் சபதத்தை முடித்து, அவிழ்த்த கூந்தலை முடிக்கச் செய்தார். மற்றும் பாண்டவர்கள் முடிசூடும்படி செய்தார். அது மட்டுமின்றி, உத்தரையின் கருவில் உள்ள குழந்தையைக் காத்து பாண்டவர்களின் வாரிசாக பரீட்சித்து மகாராஜாவைத் தோற்றுவித்தார். அத்தகைய கருணையங் கடலாம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கலியுகத்தில் பக்தர்களும், பகவர்களும், முனிவர்களும் சித்தர்களும் எங்கும் திரிந்து தொழுது கொண்டிருக்கக் கூடிய திருவரங்கத்தில் திருவரங்கனாக அர்ச்சாவதார நிலையில் (சிலை வடிவில்) நம்மையெல்லாம் காக்கும் பொருட்டு காத்துக் கிடக்கின்றான்.

அத்திருவரங்க நாதனை, சென்று வணங்கி உய்ய வேண்டும் என்கிறார் பெரியாழ்வார்.
பாடலைக் காண்போம்:

''மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து
அவர்களையே மன்னராக்கி
உத்தரை தன் சிறுவனையும் உய்யக் கொண்ட
உயிராளன் உறையும் கோயில்
பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ்ச திசை விளக்காய்
நிற்கின்ற திருவரங்கமே''

சென்று சேவிப்போம் வருவீர்!
திருவரங்கனையே
சென்று சேவிப்போம் வருவீர்!

''திருவரங்கம் என்னா மிண்டர் பாய்ந்து
உண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கு இடுமின் நீரே.''

★★★



சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமித் திருக்கோயிலில் 3.2.2002 அன்று பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்புவழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் திருமிகு பொன்னையன் அவர்களும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல். அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் உதவி ஆணையாளர் / செயல் அலுவலர் திருமிகு ஆ. குப்புசாமி. பி.ஏ., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

 பதிவு எண். T.N/CHIEF PMG/515/2001/WPP 283





சென்னை திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ள அருள்மிகு திருவேட்டீசுவரர் ஆலயத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 4.2.2002 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திரசரசுவதி சுவாமிகளும், மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி, பி.எஸ்.சி., பி.எல். அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.***, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.